Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

**LIONAIR** இப்போது இரண்டு சேவைகள்

தினசரி சேவை

காலை 7.15 கொழும்பு - யாழ்.
காலை 9.15 யாழ். - கொழும்பு

புதன் தவிர்ந்த ஏனைய நாட்களில்

மாலை 3.15 கொழும்பு - யாழ்.
மாலை 5.00 யாழ். - கொழும்பு

பயணக் கட்டணம்
ரூபா 1,999/-ஸ்ரீ மட்டுமே!!

Hotline - 0777-382343, 072-401423, 01-343125.

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 ஐப்பசி 14 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷஃபான் 24 (31.10.2002) வியாழக்கிழமை இதழ் : 31



# போருக்கு முடிவுகாண விரும்புகிறோம்

# இன்றைய பேச்சு மகிழ்ச்சியான சகுனம்



## தாய்லாந்துப் பேச்சுக்கள் இன்று காலை ஆரம்பம்

(பாங்கொக்)

**அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இரண்டாம் கட்ட சமாதானப் பேச்சுக்கள் இன்று காலை தாய்லாந்தின் நொகன்பத்தம் நகரில் ஆரம்பமாகின்றன. இப்பேச்சுக்கள் பற்றி தாய்லாந்தில் - கருத்துத் தெரிவித்த, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், போருக்கு முடிவைக் காணவிரும்புகிறோம் என்று தெரிவித்தார். அரசாங்கத் தரப்பிலிருந்து, அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் - இன்றைய பேச்சுக்கள் ஒரு மகிழ்ச்சியான சகுனம் எனக் குறிப்பிட்டார்.**

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் இன்று காலை தாய்லாந்தின் நொகன்பத்தம் நகரில் ஆரம்பமாகின்றன.

அரசாங்கத்தரப்பில் - அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ், ரவூப் ஹக்கீம், மிலிந்த மொறகொட, சமாதானச் செயலகத்தின் செயலாளர் பேனாட் குணதிலக, மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட, சமாதானச் செயலகத்தை சேர்ந்த ஜோன் குணரத்ன, சானக ஜயசேகர ஆகியோரும் -

விடுதலைப்புலிகள் தரப்பில் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், அரசியறதுறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், திருமதி அடேல் பாலசிங்கம், கேணல் கருணா, சட்ட ஆலோசகர் ருத்திர குமாரன், கலாநிதி ஜோய் மகேஸ்வரன் ஆகியோரும் பேச்சுக்களில் பங்குபற்றுகின்றனர்.

இப்பேச்சுக்கள் பற்றி தாய்லாந்தில் கருத்து தெரிவித்த கலாநிதி அன்ரன் பாலசிங்கம் - போருக்கு முடிவு காண விரும்புவதாகத் தெரிவித்தார். அமைச்சர் ஜி.எல். பீரிஸ் கருத்துக் கூறுகையில் - இன்றைய பேச்சுக்கள் ஒரு மகிழ்ச்சியான சகுனம் எனக் குறிப்பிட்டார்.

இன்றைய பேச்சுக்கள் நான்கு நாட்கள் நீடிக்குமென எதிர்பார்க்கப் படுகின்றது.

பேச்சுக்களில் முக்கிய விடயங்களாக, கூட்டுச் செயலணிக்குழுவுக்கு இறுதி வடிவம் கொடுத்தல், உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றுதல் ஆகியன ஆராயப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## புலிகள் குழுவினருக்கு விசேட கடவுச் சீட்டு

(பாங்கொக்)

கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக நேற்று தாய்லாந்து சென்ற விடுதலைப்புலிகளின் குழுவில் இடம் பெற்ற போராளிகள்- இலங்கைக் கடவுச் சீட்டைப் பயன்படுத்தியதாகத் தெரியவருகின்றது.

இவர்களுக்கென விசேடமாக தயாரிக்கப்பட்ட இக்கடவுச்சீட்டுக்களில் விமான ஓடுபாதையில் வைத்தே சம்பிரதாய குடியகல்வு முத்திரை பொறிக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

## அமைச்சர்கள் மிலிந்த, ஹக்கீம் இன்று அதிகாலை புறப்பட்டனர்

சமாதானப் பேச்சுவார்த்தைக்காக அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், மிலிந்த மொறகொட மற்றும் நோர்வேத் தூதுவர் வெஸ்ட்போர்க் ஆகியோர் இன்று அதிகாலை தாய்லாந்து செலகின்றனர். இவர்கள் ஏனைய அரசுப் பிரதிநிதிகளுடன் நேற்றுக்காலை தாய்லாந்து செல்ல இருந்தபோதும, இறுதி நேரத்தில் அது பின் போடப்பட்டது.

இதேவேளை -

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்றுச் சந்தித்து முக்கிய பேச்சுவார்த்தைகள் நடத்தியிருந்ததாகவும் முஸ்லிம்களது உரிமைகள் பற்றி அவர் ரணிலிடம் வலியுறுத்தியதாகவும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

ஒஸ்லோவில் நவம்பர் 25ம் திகதி நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்குத் தேவையான விட

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மீள் குடியமர்வை வலியுறுத்தி வலி.வடக்கில் நேற்று பேரணி



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கில் மக்களின் மீள் குடியமர்வுக்கு அனுமதிக்கும்படி கோரி நேற்று மாபெரும் மக்கள் பேரணியொன்று தெல்லிப்பளையில் நடைபெற்றது.

வலி. வடக்கு மீட்புப் போரட்டம் நேற்றுக்காலை 10.30 மணியளவில் மல்லாகம் பழம் பிள்ளையார் கோவிலடியிலிருந்து ஆரம்பித்து தெல்லிப்பளை பிரதேச செயலகம் வரை நடாத்தப்பட்டது.

கல்லூரி மாணவர்கள், கூட்டுறவாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் வலி. வடக்கின் பொதுமக்கள் எனப் பல நூற்றுக் கணக்கான மக்கள் ஒன்று திரண்டு இம் மாபெரும் மக்கள் பேரணியை நடாத்தினார்.

தமிழ்க் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராஜா, கஜேந்திரகுமார்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



பேரணி நடத்திறதோட மட்டும் ஊரடங்கக் கூடாது பாருங்கோ..

## மாளிகாவத்தையில் இனக் கலவரம் வீடுகள், கடைகள், லொறிகள் எரிப்பு

### ஒருவர் பலி, 13 பேர் காயம்

(கொழும்பு)

கொழும்பு மாளிகாவத்தை பகுதியில் நேற்று மாலையில் சிங்கள-முஸ்லிம் மக்களிடையே பெரும் கலவரம் மூண்டது. இதில் ஒருவர் பலியானார். தொடரும் கலவரத்தை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவென இப்பகுதியில் ஊரடங்கு அமுல் செய்யப்பட்டுள்ளது. கலவரத்தினால் பெரும் சொத்து இழப்பும் ஏற்பட்டுள்ளது.



கலவரத்தில் எரியூட்டப்பட்ட லொறி

மாளிகாவத்தையில் மஜ்லீஸ் வீதியில் மதராசா ஒன்று கட்டப் படுவதையடுத்து இப்பகுதி சிங்கள-முஸ்லிம் மக்களிடையே கொந்தளிப்பு நிலை இருந்து வந்தது. இம மதராசா கட்டுவதற்கான அனுமதியை நேற்று நீதிமன்றம் தீர்ப்பு மூலம் அங்கீகரித்ததையடுத்தே கலவரம் வெடித்தது. தீர்ப்பிற்கு மகிழ்ச்சி தெரிவித்து முஸ்லிம்கள் பேரணியாக சென்றதாகவும், இதன்போதே ஆத்திரமுற்ற இன்னுமோர் கும்பல் இவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதைத் தொடர்ந்து பேரணியில் சென்றோர் போதிராஜ விகாரை மீது தாக்குதல் நடத்தினர். நிலைமை கட்டுக்கடங்காத நிலையில் வன்முறை மேலும் பரவி பல கடைகளும், வீடுகளும் லொறிகளும், ஓட்டோக்களும் தீக்கிரையாக்கப்பட்டன. ஒருவர் கொல்லப்பட்டார்; 13 பேர் காயமடைந்தனர்.



காயமடைந்த முஸ்லிம் ஒருவர் தூக்கிச் செல்லப்படுகிறார்

நிலைமையை கட்டுக்குள் கொண்டு வரவெனப் பொலிஸாரினால் பொரளை, மோதர, சங்கராஜமாவத்த, மாளிகாவத்தை, தெமடடகொட பகுதிகளில் இன்று காலை 6 மணி வரை ஊரடங்கு. அமுலாக்கப்பட்டுள்ளது. இச்சம்பவங்கள் தொடா பாக இதுவரை 50 பேர் கைதாகியுள்ளனர்.

உள்ளே - இன்றைய சிறப்பிதழ் தொழில் மலர், தாய்லாந்து புறப்படும் புலிகள் குழுவின் படங்கள்

# சமாதான சூழ்நிலை திரும்பியும் வலி.வடக்கு மக்களுக்கு பயனில்லை

## பேரணி முடிவில் கையளிக்கப்பட்ட மகஜர்

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு மீட்புக்கான நேற்றைய மக்கள் பேரணியின் இறுதியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு முகவரியிடப்பட்டு யாழ். அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. அம்மகஜரின் முழு விபரமும் வருமாறு-

பதினைந்து வருடங்களுக்கு மேலாக இடம் பெயர்ந்துள்ள வலிகாமம் வடக்கு மக்கள் எதிர்கொண்டு வரும் வேதனைகளையும் சொல்லில் அடங்காத கஷ்டங்களையும் வாய்மூலமும் பல வித மகஜர்கள் மூலமும் - கௌரவ பிரதம மந்திரி, கௌரவ புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர், கௌரவ பாதுகாப்பு அமைச்சர், இராணுவ அதிகாரிகள் மற்றும் இலங்கையில் மனித உரிமை, சமாதானம், இயல்பு வாழ்க்கை என்று பேசிக்கொள்ளும் பலருக்கும் எடுத்துக் கூறி இருக்கின்றோம். மேலும் வலிகாமம் வடக்கு மக்கள் தங்களின் வேதனைகளை வலி.வடக்கு பிரதேச செயலகத்தில் 15.05.2002 ஆம் திகதி பெருந்தொகை மக்கள் கூடி அமைதியான உண்ணாவிரதத்தையும், பிரார்த்தனைகளையும் அமைதியான முறையில் நடத்தினார்கள். அதன் பின் 19.06.2002 ஆம் திகதி ஊர்வலமாக யாழ்.மாவட்ட செயலகத்திற்குச் சென்று அங்கு கௌரவ புனர்வாழ்வு, புனரமைப்பு, அகதிகள் விவகார அமைச்சருக்கு விலாசமிட்ட மகஜரை கையளித்தார்கள். மேற்கூறப்பட்ட நடவடிக்கைகள் எதுவித மான சாதகமான பிரதிபலிப்பையும் தரவில்லை.

இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் பகைமைகளைத் தவிர்த்து இலங்கையில் வசிப்பவர்கள் அனைவரும் இயல்பு நிலையை உருவாக்குவதற்கு என்று கைச்சாத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தமும் வலிகாமம் வடக்கு மக்களுக்கு பிரயோகிக்கப்படவில்லை.

A9 தரைப்பாதை திறந்ததும் வன்னியிலிருந்தும் இலங்கையின் தென்பகுதியிலிருந்தும் மக்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் மீள் குடியமர வந்து கொண்டு இருக்கிறார்கள். அதன் காரணமாக இடம் பெயர்ந்துள்ள வலிகாமம் வடக்கு மக்கள் சொந்தக்காரரிடம் அவர்களது வீடுகளையும் தோட்டக்காணிகளையும் கையளிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். அவர்கள் இப்பொழுது புதிய தங்குமிட வசதிகளையும் விவசாயக் காணிகளையும் தேடி அலைகின்றனர். அதுவும் சுலபமாகக் கிடைத்தல் அரிது. இடம் பெயர்ந்த பெருமாலானோர் அடிப்படை வசதிகளோ, சரியான பராமரிப்போ இல்லாத வருத்தமூட்டும் அகதி முகாம்களில் வாழ்கின்றனர். பருவமழையின் அவர்களின் நிலைமை பரிதாபமானதும் சொல்லில் விபரிக்க முடியாததுமாகும்.

இடம் பெயர்ந்துள்ள விவசாயிகள், நாள் கூலி செய்பவர்கள், மீன்பிடித்தொழில் செய்பவர்கள் கடந்த 15 வருடங்களாக சரியான வருமானத்தை பெறவில்லை. அவர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வியைத் தொடர்வதற்கு அடிப்படை வசதிகளைக் கூடச் செய்து கொடுக்க முடியாது இருக்கின்றார்கள்.

மேலே காணப்படுகின்ற உண்மை நிலைகளைக் கருத்தில் கொண்டு இன்று நாங்கள் பலமாயிரக்கணக்கில் ஒன்று கூடிக் கீழ்க்காணப்படுகின்ற எமது மனிதாபிமான வேண்டுகோள்களுக்கு பரிகாரம் காண்பதன் மூலம், மேலும் மேலும் பேரணிகளையும் போராட்டங்களையும் செய்வதை தவிர்த்துக் கொள்ள வழிகாணும் படி தங்களை வேண்டி நிற்கின்றோம்.

மேற்படி வலி.வடக்கு மக்களின் கோரிக்கை அடங்கிய மகஜர்கள் போர்நிறுத்த கண்காணிப்புக்குழு உறுப்பினருக்கும் வலி.வடக்கு புனர்வாழ்வு கழகத்தினரும் பரமநாதனால் கையளிக்கப்பட்டது.

பிரதமர், பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கான மகஜர்கள் யாழ். அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டன.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் 'நமது ஈழநாடு' பத்திரிகை நிறுவனத்தின் நிர்வாக இயக்குனருமாகிய எஸ்.சிவமகாராஜா அவற்றை அரச அதிபரிடம் கையளித்தார்.

(க,லி,72,105)

# ரி.ரி.என். பொதுஅறிவுப் போட்டியில் தெரிவு செய்யப்பட்டோர் விபரம்

ரி.ரி.என் தொலைக்காட்சி நிலையம் நடாத்திய பொது அறிவுப் போட்டியில் முதற்சுற்றில் தெரிவு செய்யப்பட்டவர் விபரம் வருமாறு:-

**சோமஸ்கந்தாக் கல்லூரி**

இரத்தினசிங்கம் சிந்துஜா, விஷ்ணுசிங்கம் தயாளினி, குணசீலன் தர்சன், சிவராஜா சிவகௌரி, சின்னத்துரை ஜீவனா, தயானந்தன் அம்பிகா, ஆறுமுகம் வானதி, ஆனந்தக் கிருஷ்ணன் கமலக்குமரன், நல்லையா சிவசாந்தினி, புலேந்திரன் சுகன்யா, சுந்தரலிங்கம் நிறோஜா, சின்னத்துரை கோபிக்கிருஷ்ணா, பத்மநாதன் விஷ்ணுரூபன், மகேந்திரன் செல்வகாந்தி, இராசரத்தினம் கேதாரணி, அழகதுரை தனுஷயா, கதிர்காமநாதன் திருவேணி,

**யா.இடைக்காடு மத்திய மகா வித்தியாலயம்.**

பாலசிங்கம் தாரணி, தமோதரன் பிரதாபன், சிற்சபேசன் சர்மினி, சிவஞானசுந்தரம் சுகீசன், நடராசா தணிகைக்குமரன்.

**யாழ்.அச்சுவேலி மத்திய கல்லூரி**

சின்னராசா குறிஞ்சி, நாகராசா சமிந்தன், சபாரட்ணம் சோபிதா, சிவசுப்பிரமணியம் யனுஷா, சிவசுப்பிரமணியம் ஜனகன், பத்மநாதன் விஜயரஞ்சன், குகேஸ்வரன் சிவசுதன்.

**யாழ்.திரேசா மகளிர் கல்லூரி**

விருத்தகுரீசக்குருக்கள் விக்கினேஸ்வரி, சின்னத்துரை வாசுகி, எட்வின்ஜோர்ஜ் அலக்கியா, வேலுப்பிள்ளை சுதர்சினி, சரவணமுத்து தமிழ்ச்செல்வி,

**யாழ்.அத்தியார் இந்துக் கல்லூரி**

செல்வராசா யசோதா, தெய்வேந்திரன் இராசேந்திரன், அரசரத்தினம் வசந்தரூபி, சிதம்பரநாதன் சஜீவன், வேலாயுதம் பிரகாஸ், சிவராசா தமிழ்ச்செல்வன், சுப்பிரமணியம் அம்பிகா, சின்னத்தம்பி விஜிதா.

**யாழ்.கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி**

குமாரசாமி மதனகுமார், தவராசா சோபிகா, தம்பியப்பா ஜெயகோபி, விஸ்வலிங்கம் ரோகினி, ஈஸ்வரதாசன் தேன்மொழி, திருநாவுக்கரசு திருமாலினி, அருமத்துரை நிடிலா, சிவஞானம் கோமளதேவி, சுப்பிரமணியம் கேதாரணி, செல்வரட்ணம் சுவர்ணா, நடராசா புஸ்பாஞ்சலி, செல்வராசா காந்திமதி,

**யாழ்.செங்குந்தா இந்துக் கல்லூரி**

தில்லைவாசகர் பிரியதர்சினி, சண்முகநாதன் சசிதா, அமிர்தநாதன் செபஸ்ரியன், சிறிதரன் சிந்துஜா, சிவநேசன் நளாயினி.

**யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்**

ஜெகசோதி அமிதாப், குணரத்தினம் ஜீவிகா, லோறன்ஸ் கோவ்ரன், தம்பிராசா, பிரியந்தி, சண்முகலிங்கம் மேனகா, சந்திரகுமார் சுவப்னா, வைரமுத்து விஜித ரன், பூபாலசிங்கம் கலைச்செல்வி, மகேஸ்வரன் மலர்விழி, வல்லிபுரநாதன் பிரிந்தாஜினி, சற்குணராசா லிங்கேஸ்வரன், பண்டாரம் மேனகா, சுப்பிரமணியம் சிவதர்சன், குணரெத்தினம் பரமராசா.

**யாழ்.சென்.ஜேம்ஸ் மகளிர் கல்லூரி**

யோகமணி டியோப்றா, வால்டர் ஜெறாட் றெஜிமலா, கனகசபை பிரதீபா, சின்னப்பு றொசானா பொடஸ்ரா, சாள்ஸ் எமிலியான் யாழினி, கிறிஸ்ரியன் மேரி நிறோஜினி.

**யாழ்.சென்.சாள்ஸ் மத்தியமகா வித்தியாலயம்.**

கிறிஸ்தோப்பிள்ளை பத்மராஜி, இம்மானுவல் மேரி,

(தொடரும்...)

**யாழ்ப்பாண மாநகர சபை**
**யாழ்ப்பாண பொதுசன நூலகம்**

யாழ்ப்பாண பொதுசன நூலகத்தின் வரலாற்றைப் பூரணமாக தயாரித்து ஆவணப்படுத்த யாழ்ப்பாண மாநகரசபை தீர்மானித்துள்ளது. இவ்வாவணத்தைத் தயார் செய்வதற்கு நூலக வரலாற்று ஆவணங்களை பாதுகாத்து வைத்திருக்கும் நலன் விரும்பிகள் அவற்றினை பிரதம நூலகரிடம் வழங்கி பூரணமான ஆவணம் ஒன்றைத் தயாரிக்க ஒத்துழைக்குமாறு அன்பாகக் வேண்டுகின்றேன்.

ஆவணங்களின் மூலப்பிரதிகள் தேவையான தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் உரிமையாளருக்கு திருப்பிக் கொடுக்கப்படும் என்பதை உறுதியாகத் தெரிவிக்கின்றேன்.

(சி-114)

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.

சிங்கர் தையல் இயந்திரங்களை
உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளவும்,
உதிரிப்பாகங்களை நியாய விலையில் பெற்றுக்கொள்ளவும்
நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
சிங்கர் உத்தரவு பெற்ற விற்பனை முகவர்
62/32, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

உங்களது நயம்,
நம்பிக்கை நாணயமுள்ள
தங்க, வைர நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
தரம் நாடுவோர்
தவறாமல் நாடுமிடம்
திருத்திகா ஜீவல்லர்ஸ்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
177, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
ஓடர் நகைகள் குறித்த தவணையில்
22 கரட் தங்கத்தில் செய்து
கொடுக்கப்படும்

# ஹெலியில் வந்த புலிகளின் குழு ஓடுபாதையில் வைத்து விமானத்தில் ஏற்றம்

நேற்று அதிகாலை தாய்லாந்து புறப்பட்ட விடுதலைப்புலிகள் குழு முன்னதாக கட்டுநாயக்கா விமான ஓடு பாதை ஒன்றில் நேரடியாக ஹெலி மூலம் கொண்டு வந்து இறக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. ஓடு பாதையில் வைத்தே இவர்கள் தாய்லாந்து செல்லும் ஹொங்கொங் விமான நிறுவன விமானம் ஒன்றில் ஏற்றப்பட்டனர்.

விமான நிலையத்தில் பொதுவாக மேற்கொள்ளப்படும் ஆவணப் பரிசோதனைகள் இவர்களுக்கு அந்த விமான ஓடுபாதையில் வைத்தே பரிசோதிக்கப்பட்டு உடனடியாகவே விமானத்தில் ஏற்றப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சமுர்த்தி முத்திரை 100 ரூபாவால் குறைப்பு

நாளை முதல் சமுர்த்தி முத்திரை 100 ரூபாவால் குறைக்கப்படவுள்ளது. இதுவரை 700 ரூபா பெறுமதியான சமுர்த்தி முத்திரைக்குப் பதிலாக 600 ரூபா பெறுமதியான முத்திரைகளே இனிமேல் வழங்கப்படவுள்ளன.

## இன்றைய நாள் இனிய நாள்

**31.10.2002 - வியாழக்கிழமை**

**மேடம்** :- தேசுகக் குறைவு, பணவரவு சமம், பெண்களால அவமானம், பேராசை, கல்வி முன்னேற்றம், வியாபார சமநிலை.

**இடபம்** :- தேகசுகக் குறைவு, வைத்தியச் செலவு, புத்திரரால் செலவு, கோபம், கல்வி சமநிலை, வியாபாரம் சமநிலை.

**மிதுனம்** :- தேகசுகம் நன்று, பணவரவு, தீயோர் சகவாசம் தேடி வருதல், மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கர்க்கடகம்** :- தேகசுகக் குறைவு, பணவரவு, வரவுக்கேற்ற செலவு, எடுத்த காரியம் தடை, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**சிங்கம்** :- தேகசுகம் நன்று, பணவரவு, நண்பர்கள் வருகை, அறுசுவையுண்டி, ஆடை அணிவதில் மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம், வியாபாரம் முன்னேற்றம்.

**கன்னி** :- தேகசுகம் சமம், பணவரவு, கர்வத்தினால் செலவு, மனச்சஞ்சலம், கல்வி சமநிலை, வியாபாரமுன்னேற்றம்.

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்
அவர்களின் சகோதரரின் புத்திரர்
இ.வெங்கடேச ஐயர்.

**துலாம்** :- தேகசுகம் சமம், பணவரவு சமம், தெய்வவழிபாடு, மூத்த சகோதர உறவு, கல்வி சமநிலை, , வியாபாரம் சமம்.

**விருச்சிகம்** :- தேகசுகம் நன்று, பணவரவு, பொதுசேவையில் மதிப்பு, வெளியூர் பயணம், கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமம்.

**தனு** :- தேகசுகக் குறைவு, பணவரவு, பிதாவுடன் கருத்து வேறுபாடு, தெய்வ வழிபாடு, தேவையற்ற பயம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மகரம்** :- தேகசுகக் குறைவு, வரவுக்கு மிஞ்சிய செலவு, திடீர் பயம், புதிய வேலை தொடங்குவது நன்றல்ல, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கும்பம்** :- தேகசுகம் நன்று, பணவரவு, மனமகிழ்ச்சி, உறவினர் வருகை, அறுசுவையுண்டி, விதவிதமான ஆடையணிவதில் மகிழ்ச்சி, கல்விச் சமநிலை, வியாபார முன்னேற்றம்.

**மீனம்** :- தேகசுகம், கடன் நீங்குதல், எதிரி தலைகுனிவு, அறுசுவையுண்டி, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

SUNDHARSON
Importers & Distributors of
Electrical Items, P.V.C.pipes & Fittings Etc.
Central Market View, Manipay.
T.P. / Fax : 021 - 2222751

தீபாவளிப் பரிசுப் போட்டி
சுந்தர்சன்
மத்திய சந்தை முன்பாக
பிரதான வீதி, மானிப்பாய்.
உள்ளூரிலேயே மக்கள் சேவையை சிரமேற் கொண்டு
கடந்த 22 ஆண்டு காலமாக
- மின்சார உபகரணங்கள்
- P.V.C.நீர்க் குழாய்கள், இணைப்புக்கள்
- அலங்காரப் பொருட்களை
நிதானம், நியாயம், உத்தரவாதத்துடன் மொத்தமாகவும், சில்லறையாகவும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள
சுந்தர்சன் மானிப்பாய
தீபாவளி - 2002 பரிசுப் போட்டி விபரம்
25.10.2002 - 06.11.2002 வரையிலான காலப்பகுதியில் எமது ஸ்தாபனத்தில் அதி கூடிய தொகைக்கு பொருட்களைக் கொள்வனவு செய்யும
- வீட்டு உரிமையாளர்கள் மூவருக்கும்
- வர்த்தகப் பிரமுகர்கள் மூவருக்கும்
- கட்டட ஒப்பந்தக்காரர்கள் மூவருக்கும்
- மின் இணைப்பாளர்கள் அறுவருக்கும்
அதிசயிக்கத்தக்க பெறுமதிவாய்ந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.
ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்
மத்திய சந்தை முன்பாக
பிரதான வீதி, மானிப்பாய்.
சுந்தர்சன் உரிமையாளர்
T.P./ Fax - 2222751

# உங்களை இங்கு அழைத்துவந்த எனக்கே விபரங்கள் தெரியப்படுத்தப்படுவதில்லை

## தூதுவர் வெஸ்ட்பேர்க்கிடம் ஜனாதிபதி அதிருப்தி தெரிவிப்பு



வெஸ்ட்பேர்க்

(கொழும்பு நிருபர்)

தாய்லாந்து சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான விவரங்களைப் பரிமாறிக்கொள்வதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பு ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றிருந்தது. உத்தியோகபூர்வமாக இடம்பெற்ற இச் சந்திப்பில் தாய்லாந்தில் நடந்த முதலாம் கட்டப்பேச்சுக்கள் தொடர்பாக, நோர்வே தூதுவர் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு விளக்கமளித்திருந்தார். அத்துடன் இன்று ஆரம்பமாகவுள்ள இரண்டாம் சுற்றுப் பேச்சுக்கள் தொடர்பாகவும் தகவல்கள் பரிமாறப்பட்டன.

இச்சந்திப்பில் நோர்வே அரசின் சமாதான முயற்சி தொடர்பான நிலைப்பாடுகள் குறித்து ஜனாதிபதி



சந்திரிகா

சந்திரிகா தனது திருப்தியின்மையை வெளிப்படுத்தியிருந்தார்.

ஆரம்பத்தில் இந்தச்சமாதான முயற்சிகளில் நோர்வேயை அழைத்து வந்தது தானே என்றும், இப்போது தனக்குத் தெரியப்படுத்தப்படாமலும் உரிய நேரத்தில் தகவல் வழங்காமலும் நோர்வே பல காரியங்களைச் செய்வது குறித்தும் ஜனாதிபதி சந்திரிகா தனது அதிருப்தியை தெரிவித்திருந்தார்.

எதிர்காலத்தில் சமாதான முயற்சிகள் தொடர்பாக உரிய நேரத்தில் தகவல்களை வழங்க நடவடிக்கை எடுப்பதாக அப்போது வெஸ்ட்பேர்க் உறுதியளித்தார். அண்மையில் இலங்கைக்கு வந்த நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தலைமையிலான சமாதானக் குழுவை ஜனாதிபதி சந்திக்க மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(01)

### 15 ஆயிரம் ரூபா நிதியுதவி

(மல்லாகம்)

வலிவடக்கு பிரதேச செயலர் பிரிவில் தற்போது வன்னியிலிருந்து வந்து மீளக் குடியமர்ந்த குடும்பங்களிற்கு வழங்குவதற்கான மீளக் குடியமர்வு நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றுள்ளது.

முதற்கட்டமாக முன்னுரிமை அடிப்படையில் 66 குடும்பங்களுக்கு தலா 15 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது. (68)

### கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் நாடக ஆற்றுகை

(அரியாலை)

நாடக அரங்கக் கல்லூரியின் பரீட்சைத் தயாரிப்புக்களின் இறுதி ஆற்றுகைகளான, இராசா அரசகுல சூரியனின் 'நற்றுணையாவது' நாடகமும் -

கனகசபை பற்குணநாதனின் 'திருந்திய உள்ளம்' நாடகமும் எதிர்வரும் 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 2.30 மணிக்கு யாழ். கனகரத்தினம் மத்திய மகாவிததியாலயத்தில் இடம்பெறும்.

# திருமலை நகரிலுள்ள காவலரண்கள் எக்காரணமிட்டும் அகற்றப்படக்கூடாது!

## 'சிஹல உறுமய' கோரிக்கை விடுக்கிறது

(திருமலை நிருபர்)

திருகோணமலை நகருக்குள் அமைக்கப்பட்டுள்ள காவலரண்களை அகற்றக்கூடாது என 'சிஹல உறுமய' கோரிக்கை விடுத்துள்ளது.

திருமலை நகரப் பகுதிக்குள் உள்ள பத்துப் பொலிஸ் காவலரணகளையும் எக்காரணம் கொண்டும் அகற்றுவதற்கு அரசாங்கம் முற்படக்கூடாது. இந்தக் காவலரண்கள் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதாகவும் - ஆத்திரமூட்டும் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு இவை அவசியமானவை என்றும் 'சிஹல உறுமய' வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் - பொதுமக்களின் பாதுகாப்பைக் கவனத்தில் கொண்டு, பத்து பொலிஸ் காவலரண்களையும் அகற்றாமல் இருப்பது நாட்டுக்கும் இனத்துக்கும் செய்யும் முக்கியமான சேவை என்றும் 'சிஹல உறுமய'வின் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# முதன்முறையாகத் தெரிவான எம்.பிக்களுக்கு ரூ. 3 லட்சம் பெறுமதியான உபகரணங்கள்

## பாராளுமன்ற விவகார அமைச்சர் நடவடிக்கை

கடந்த வருடம் முதன் முறையாகத் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மூன்று லட்சம் ரூபா பெறுமதியான அலுவலக உபகரணங்களை வழங்குவதற்கு நாடாளுமன்ற விவகார அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

புதிதாக நாடாளுமன்றத்திற் குத் தெரிவாகியுள்ள ஐம்பது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே இந்த அலுவலக உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

நடமாடும் தொலைபேசி, கணினி இயந்திரம், போட்டோ பிரதி இயந்திரம், பக்ஸ் இயந்திரம் ஆகியவற்றை வழங்குவதற்கே நாடாளுமன்ற விவகார அமைச்சர் நடவடிக்கை எடுத்திருக்கின்றார்.

# பேச்சுக்கு ஜனாதிபதியின் பிரதிநிதி; ரணில் இன்னும் கோரவில்லையாம்!

## சந்திரிகாவின் ஊடகப் பேச்சாளர் ஹரி பீரிஸ்

(கொழும்பு நிருபர்)

தாய்லாந்துப் பேச்சுவார்த்தையின் இரண்டாம் கட்டம் ஆரம்பமாகும் முன்னர் - அரசாங்கம் தனது அரசியல் நிலைப்பாட்டினைத் தெளிவுபடுத்த வேண்டுமெனவும், பேச்சுக்களின் முழுவிபரமும் தன்னிடம் பகிரப்பட வேண்டியது அவசியம் எனவும் ஜனாதிபதி எதிர்பார்ப்பதாக - அவரது ஊடகப் பேச்சாளர் ஹரி பீரீஸ் வலியுறுத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை, ஜனாதிபதி செயலகத்தில் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் - தாய்லாந்துக்கு ஜனாதிபதியின் பிரதிநிதி ஒருவர் அனுப்பப்பட வேண்டுமென இன்னமும் ரணில் அரசாங்கம் கோரவில்லை என்றும், அவ்வாறு கோரினால் மாத்திரமே - ஜனாதிபதி தனது பிரதிநிதி ஒருவரை அனுப்புவது பற்றிப் பரிசீலிப்பார் எனவும் ஹரி பீரீஸ் தெரிவித்தார்.

இதேவேளை - ஐ.தே.கவும், பொ.ஐ. முன்னணியும் கலந்துபேசி ஒருமித்த இணக்கப்பாட்டிற்கு வரமுடியுமென ஜனாதிபதி நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் ஹரி பீரீஸ், இந்த மாநாட்டில் மேலும் தெரிவித்தார்.

### வைத்தியசாலையில் குழாய்க்கிணறு

தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையில் குழாய்க்கிணறு அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதி சென்ற ஆண்டு சுகாதாரத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டது. (68)

# தாய்லாந்திற்குப் புறப்படும் முன்னர் புலிகளின் பிரதிநிதிகள்.....



புதுக்குடியிருப்பு மைதானத்தில் கேணல் தீபன், கேணல் பானு, கேணல் கருணா, புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டம்மான், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன்.



கேணல் விதுஷாவுடன் அடேல்



களமுனை கழிந்த அரசியற் களத்தில் புலிகளின் தளபதிகள்.



கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் கேணல் தீபன், கேணல் பானு.



ஹெலியில் புறப்படத் தயாராகின்றனர் பாலசிங்கம் தம்பதியினர்.

உலகவலம்

# மொஸ்க்கோவில் நடந்த பணய நாடகத்தில் ரஷ்ய பாதுகாப்பு அதிகாரிகளுக்குத் தொடர்பு!

(மொஸ்க்கோ)

மொஸ்க்கோ பணயக் கைதிகள் நாடகத்தில் ரஷ்யாவின் பாதுகாப்புத்துறை அதிகாரிகளும் ரஷ்யாவின் அரசியல் விவகார ஆலோசகர்களும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என செய்தியாளர்களுக்கு ரஷ்ய பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாதுகாப்புத்துறை அதிகாரிகள் உட்பட முப்பதுபேர் இவ்விடயம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு அதிகாரிகளும் சிவில் அதிகாரிகளும் செச்னியப் போராளிகள் ஆயுதங்களையும் வெடி பொருட்களையும் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு தேவையான கட்டடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொடுத்துள்ளார்கள் என ரஷ்ய விசேட படைப்பிரிவின் முன்னாள் தளபதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

**பெரும் மர்மம் துலங்குகிறது**

இப்பணய நாடகத்தின் ஆரம்பத்திலிருந்து உச்சக்கட்டம் வரை நன்கு திட்டமிடப்பட்ட வகையில் செச்னியப் போராளிகளுக்கு உதவியையும் ஆதரவையும் பாதுகாப்பு அதிகாரிகளும் சிவில் அதிகாரிகளும் வழங்கியுள்ளனர்.

மீட்பு நடவடிக்கை தலைமையத்தில், பணயநாடகம் தொடர்பாக என்ன வகையான நகர்வுகளும் திட்டமிடல்கள் ரஷ்ய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுகின்றன என்பது தொடர்பாக அங்கே பணியாற்றும் சில உள்ளகப்பகுதியினரே செச்னிய போராளிகளுக்கு அறிவித்த வண்ணம் இருந்திருக்கிறார்கள்.

ரஷ்யாவின் லிபரல் பாராளுமன்ற அங்கத்தவர்கள் இவ்விடயம் கையாளப்படும் விதம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.



நச்சுவாயுவால் கொல்லப்பட்டவர்களின் துக்கம் இன்னும் நீடிக்கிறது.



நச்சுவாயுவால் தாக்கப்பட்டு சிகிச்சைபெறும் ரஷ்யப் பெண்மணி.

### ரஷ்ய உலங்குவானூர்தி சுட்டுவீழ்த்தப்பட்டது

செச்னியத் தலைநகர் குறொஸ்ணிக்கு வெளியேயுள்ள பகுதியொன்றில் ரஷ்யப் படையிரின் உலங்கு வானூர்தியொன்று சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது.

உலங்கு வானூர்தியில் பயணித்த நான்கு படையினரும் இத் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

அதேவேளை ரஷ்யப் படையினர் செச்னியா மீதான தமது சுற்றிவளைப்பு மற்றும் `கைது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர். மேலும் கடந்த சில நாட்களாக மலைப்பகுதிகள் மீது ரஷ்ய விமானப் படை தாக்குதல்களையும் மேற்கொண்ட வண்ணம் உள்ளது.

போராளிகள் எனச் சந்தேகிக்கப்படும் நூறுபேரை தாம் கைது செய்துள்ளதாக ரஷ்ய அரசாங்கம் அறிவித்துள்ளது.

## நச்சுவாயு தாக்குதல் உபாயம் புலனாய்வாளர்கள் ஆர்வம்!

(மொஸ்கோ)

மொஸ்கோ பணயக்கைதிகள் நாடகம் நச்சு வாயு பிரயோகிக்கப்பட்டு முடிவுக்கு கொண்டுவரப்பட்டது தொடர்பாக வெளிநாட்டுப் புலனாய்வு நிறுவனங்கள் ஆய்வுகளை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளன என மேற்கத்தைய செய்தி நிறுவனத்தின் மொஸ்கோ செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.

அதிக எண்ணிக்கையான உயிர்களைப் பறிகொடுத்து நிறைவேற்றப்பட்ட, சர்ச்சைகள் நிறைந்த, இந்நடவடிக்கையின் உபாயங்களை அறிவதில் புலனாய்வாளர்கள் பெரும் முயற்சி காட்டுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தமது நாடுகளில் இவ்வாறான பணயநாடகங்கள் அரங்கேறினால் தாமும் இவ்வாறான வாயுப் பிரயோகங்கள் மூலம் அவ்விடயங்களை முடிவுக்கு கொண்டு வருவது பொருத்தமாக அமையுமா என்பதில் சந்தேகம் தெரிவிக்கும் அவர்கள் - இவ்விடயம் பற்றிய தகவல்களை ஆய்வு செய்வதில் பெரும் ஆர்வம் கொண்டுள்ளார்கள்.

## சினைப்பர் தாக்குதல்காரர் நீதிமன்றில்

(வொஷிங்டன்)

வொஷின்டனில் தாக்குதலில் ஈடுபட்டதாகத் தீவிரமாக சந்தேகிக்கப்படும் ஜோன் அலன் முகமெட் (வயது 41), ஜோன்லீ மல்வோ (வயது 17) ஆகியோர் கைதுசெய்யப்பட்டதையடுத்து சினைப்பர் தாக்குதல் பற்றி பல தகவல்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

அவர்களது இடமொன்றிலிருந்து சர்வதேச செய்தித் தொடர்பு வலைப்பின்னல் அமைப்பு (News-Web sites) உள்ள வசதிகள், வானொலிப்பெட்டி, கயில நிற கையுறைகள் என்பன மீட்கப்பட்டுள்ளன. இக்கபில நிற உறைகள் தாக்குதல் நடத்தப்பட்ட இடமொன்றிலிருந்து முன்னர் மீட்கப்பட்ட கையுறைகளுடன் ஒத்திருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

முகமெட்டுக்கு எதிராக கிறீன் பெல்ற்றிலுள்ள மாகாண நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மல்வோவுக்கு எதிராக இன்னமும் குற்றங்கள் பதியப்பட்டு வழக்கு தாக்கல் ஆகவில்லை. இதற்கு அவரது வயதே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

## பாகிஸ்தானில் இழுபறிநிலை!

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்ற பல நாட்கள் கடந்த நிலையிலும் இன்னமும்



அங்கு அரசாங்கம் அமைக்கப்படவில்லை.

பாகிஸ்தான் தலைவர் ஜெனரல் முஷ்ராப் ஆதரவு பாகிஸ்த்தான் முஸ்லிம் லீக் குஜட் இ அசாம் (PML-Q), பாகிஸ்த்தான் மக்கள் கட்சி (PPP) ஆகிய இரண்டுமே அறுதிப் பெரும்பான்மைக்குத் தேவையான ஆசனங்களைப் பெறத் தவறிவிட்டன.

ஆறு தீவிர இஸ்லாமியக் கட்சிகளின் கூட்டான மஜிலிஸ் இ அமால் (MMA) மொத்த ஆசனங்கள் 272 இல் 45 ஆசனங்களை பெற்றன.

இக் கூட்டுக் கட்சி பயங்கரவாதத்துக்கு எதிராக அமெரிக்கா, தான் செய்துவருவதாகச் சொல்லிக் கொள்ளும் போரை - பாகிஸ்த்தான் ஆதரிக்கக்கூடாது என வலியுறுத்துகிறது. அத்துடன் அமைக்கப்படும் அரசாங்கத்தில் தமக்கு முக்கிய இடம் தரப்படவேண்டும் எனவும் அக் கட்சிகள் வலியுறுத்துகின்றன.

அதேவேளை, ஜெனரல் முஷாரப், பாகிஸ்தான் மக்கள் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து, தமது ஆதரவு முஸ்லிம் லீக் ஆட்சியமைக்கும் வாய்ப்புக்களை உருவாக்க முயற்சித்து வருகிறார் என்று கூறப்படுகிறது.

### அமெரிக்க இராணுவ ஜெனரலின் விருப்பம்

ஈராக் மீதான அமெரிக்க தாக்குதலுக்கு தலைமை வகிப்பார் என எதிர்பார்க்கப்படும் அமெரிக்க ராணுவத்தளபதி ஜெனரல் ரொமி பிறாங்ஸ் (General Tommy Franks), ஐநா பாதுகாப்புச் சபையூடாக இணக்கம் கண்டு ஒரு வேலைத்திட்டத்தை அதன் அடிப்படையில் நகர்த்துதலே மிக நல்ல முறையாக (The best method) அமையும் எனத் தெரிவித்தார். பாதுகாப்புச் சபையூடாக ஒரு நேச அணியை உருவாக்குதல் சாதகமான சூழ்நிலையை தோற்றுவிக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை -

ஈராக் மீதான ஆயுதப் பரிசோதனை மேற்கொள்ளும் ஐ.நா குழுவினர் வொஷிங்ரன் சென்று அமெரிக்க உப ஜனாதிபதி டிக்செனியை சந்தித்துப் பேசவுள்ளனர்.

## வியட்னாமில் பெரும் தீ அனர்த்தம்;
## திருமணத்தில் பங்குபற்றிய நூறு பேர் கருகி மாண்டனர்!

(ஹோச்சிமின்)

வியட்னாமின் ஹோச்சிமின் (Ho Chi Minh City) நகரத்தில் பல்தேசிய நிறுவனங்கள் அமைந்துள்ள ஆறு அடுக்கு மாடிக்கட்டடத் தொகுதியில் ஏற்பட்ட அகோரத் தீ விபத்தில் 100 பேர் வரை மடிந்துள்ளனர். முதலில் வெளியான தகவல் 50 பேர் கொல்லப்பட்டதாக உறுதிப் படுத்தியது.

சயிகன் சர்வதேச வர்த்தக நிலைய கட்டிடமே தீ விபத்தில் அகப்பட்டது. அக்கட்டிடத்தில் வீடுகள், கடைகள், அலுவலகங்கள் என்பன உண்டு.

ஆறு அடுக்கு மாடிக் கட்டிடமான அதன் ஒரு பகுதியில் திருமண நிகழ்வு ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவ்விடத்தில் பரவிய தீ தீவிரஅழிவுகளை ஏற்படுத்தியது.

ஏறத்தாழ ஐந்து மணி நேரமாகத் தொடாந்து எரிந்த தீயின் கொடுமை தாங்கமுடியாமல் திருமண வைபவத்தில் கலந்து கொண்டோர் ஜன்னல்களுடாகக் கீழே பாயத் தொடங்கினர்.

புதன்கிழமை காலையிலும் பொலிசாரும் தீயணைப்புப்படையினரும் இறந்த உடல்களை அகற்றியபடி இருந்தனர். கட்டிடத்துள் எத்தனை பேர் இருந்தார்கள் என்பது தெரியவில்லை.

பிரிட்டன், அவுஸ்திரேலியா, பெல்ஜியம், ஜேர்மனி, கொங்கொங், சிங்கப்பூர், தென்கொரியா, தாய்லாந்து ஆகிய நாடுதகளைச் சேர்ந்த நிறுவனங்கள் தமது அலுவல்களை அத்தொடர் மாடியில் கொண்டுள்ளன. தீவிரத்துக்கான காரணம் இன்னும் புலனாகவில்லை.

ஹோச்சிமின் மாநகர தீயணைப்புச் சேவையினர் உபகரணப் பற்றாக்குறை மற்றும் திறமையீனம் காரணமாக தீயணைப்புத் தாமதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.





ஐந்துமணிநேரம் தொடர்ந்து எரிந்த பெரும் தீச்சுவாலை முழுக்கட்டடத்தையுமே பலமாக முற்றுகையிட்டது. அகப்பட்டவர்கள் வெளியெற முடியாமல் தத்தளித்தனர்.

# மக்களின் தற்போதைய தேவைகளை நிறைவேற்ற மக்கள் வங்கி தயாராகின்றது!

**வடமாகாணத்தில் மக்கள் வங்கியின் தற்போதைய செயற்பாடுகள் எத்தகையவை?**

**எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் யாவை?**

**கடந்த கால யுத்த அனர்த்தங்களின் பின் தலைமைப்பீடம் எந்தெந்த வகையில் வடக்கின் பணிகளுக்கு ஒத்துழைப்பு நல்கவுள்ளது?**

**மக்கள் வங்கி மூலம் வாடிக்கையாளர்கள் எந்த விதத்தில் தத்தம் எண்ணங்களைப் பூர்த்தி செய்து கொள்ள இயலும்? அவர்களது அணுகுமுறை எத்தகையதாக இருக்க வேண்டும் என மக்கள் வங்கி அறிவுரை பகர்கிறது?**

**மேற்படி கேள்விகளுக்கு மக்கள் வங்கியின் வட வலயப் பிரதிப் பொது முகாமையாளர் எஸ்.இளம்பிறைநாதன் 'நமது ஈழநாடு' வுக்கு அளித்த நேர்காணலின் போது விரிவான விளக்கமளித்தார்.**

மக்கள் வங்கியானது - வங்கிச் சேவை எல்லா மக்களையும், சிறப்பாகக் கிராமப்புற மக்களையும் சென்றடைய வேண்டுமென்ற நோக்கில் காலஞ்சென்ற அமைச்சர் சீ.பீ. இலங்கரத்தினாவின் அபிலாஷைக்கமைய 1961ஆம் ஆண்டு யூலை 1ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

மக்கள் வங்கியின் ஆரம்ப இயக்குநர் சபைத் தலைவர் வின்சன்ட் சுபசிங்க, அதன் தற்போதைய தலைவர் லால் நாணயக்கார. ஆரம்ப வங்கியின் பொது முகாமையாளர் காலஞ்சென்ற டபிள்யூ.ஏச்.சொலசமன்ஸும் தற்போதைய பிரதம நிறைவேற்று அதிகாரி பொதுமுகாமையாளர் டெறிக்யோன் ஹெபியும் ஆவர்.

தற்போதைய சூழ்நிலையில் வாணிபக் குழுக்களும், வர்த்தக நிறுவனங்களும் வடக்கை நோக்கிப் படையெடுத்துக் கொண்டிருக்கும் இத்தருணத்தில், யாழ்.குடாநாடு வர்த்தக முககியத்துவம் வாய்ந்த மையமாக மாறியுள்ளது. இந்நிலையில் இங்கே வணிக நிறுவனங்களுக்கும், மக்களுக்கும் மகத்தான சேவையாற்றிக் கொண்டிருக்கும் வணிக வங்கிகள் பலவும் ஒன்றுக்கொன்று சளைத்தவைகளல்ல என்ற ரீதியில், தமது அபிவிருத்திப் பணிகளைத் துரிதகதியில் நிறைவேற்றிவருகின்றமை தெரிந்ததே. அந்த வகையில் அவை தம் வாடிக்கையாளர்களுக்கும் பொது மக்களுக்கும் ஏற்படுத்தித் தர இருக்கின்ற புதிய சேவைகளைத் தெரிவிப்பது வாடிக்கையாளர்களுக்கும், பொது மக்களுக்கும் வசதியளிக்குமென்பதில் சந்தேகமில்லை.

தற்போதைய சூழ்நிலையில் வங்கிகளிடமிருந்து மக்களின் எதிர்பார்ப்புக்கள் முதலில் கவனத்திற்கெடுக்கப்பட்டுப் புதிய சேவைகள் திட்டமிடப்படவுள்ளன. அந்த வகையில் யாழ். குடாநாட்டு மக்களின் எதிர்பார்ப்புக்களாவன:

1.தமக்கும் தம் உடமைகளுக்கும் பூரண பாதுகாப்பு.

2. அண்மைக்கால வன்செயல்களால் பாதிப்புற்ற தமது வீடுகள், வியாபாரத் தலங்கள், வியாபார நிறுவனங்கள், தொழிற்சாலைகள் என்பனவற்றை புனர்நிர்மாணம் செய்வதற்கு நிதி வசதிகள். மக்களின் முதல் எதிர்பார்ப்பு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் நன்கொடைகள், அடுத்து குறைந்த வட்டியில் கடன் வசதிகள்.

3. சேதமுற்ற வீதிகள், பாடசாலைகள், தொழிற்சாலைகள் மற்றும் அரச நிறுவனங்கள் புனரமைக்கப்பட்டு முழு அளவில் செயற்படல்.

4. புதிய தொழில்களில் முதலீடு செய்தல், வியாபாரத்தை முன்னெடுப்புச் செய்தல்.

5. உற்பத்திப் பொருள்களுக்கு உடன் சந்தை வாய்ப்பைப் பெறுதல்.

உதாரணமாக - இலகுவில் பழுதடையும் விவசாயப் பொருள்களை வெளிமாவட்டங்களுக்கு கால தாமதமின்றிச் சந்தைகளுக்கு அனுப்பும் வாய்ப்பினைப் பெறல்.

6. கடலுணவுகளைப் பதப்படுத்தல், பழுதடைவதன் முன்னர் சந்தைப்படுத்துவதற்கான வசதிகளைப் பெறல்.

இதைவிட - மக்களின் பாதுகாப்பு உரியவர்களால் கையாளப்படவேண்டிய அதேசமயம், மக்களின் விசேடமாக வாடிக்கையாளர்களின் பெறுமதி மிக்க நகைகள், பணம் என்பனவற்றைப் பாதுகாப்பாக வைக்க உதவும் பொருட்டு வங்கிகளில் பாதுகாப்புப் பெட்டகங்களை (SAFETY LOCKERS) அமைத்து மக்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் வழங்கத் திட்டமிட்டுள்ளோம்.

வன்செயலால் பாதிக்கப்பட்ட தொழிற்சாலைகளைப் புனரமைக்க, வடக்கு புனர்வாழ்வு மீளக்குடியேற்ற அமைச்சுடன் சேர்ந்து



**எஸ். இளம்பிறைநாதன்**
**மக்கள் வங்கியின் வடவலயப் பொது முகாமையாளர்.**

குறைந்த வட்டியில் கடன் வழங்கவுள்ளோம். இதற்காக நிதி ஒதுக்கப்பட்டதும் சேவை துரிதப்படுத்தப்படும். வீடுகள், வியாபார நிறுவனங்களுக்கான கடன் இலங்கை வங்கி மூலமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

ஏற்கனவே மக்கள் வங்கியில் கடன் பெற்றுப் பாதிப்புற்றவர்கள், தமது இழப்பீட்டை ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கும் பட்சத்தில்- வட்டிச் சலுகை வழங்கல், கடனை இலகுவில் செலுத்த மீளமைத்தல் என்பன நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

மற்றும் - இலகுவில் வங்கிகளில் கணக்குகளை ஆரம்பிக்கவும், தமது பணத்தினை வங்கிகளில் பாதுகாப்பாக வைப்பிலிடவும், தொழில்களுக்குப் பயன்படுத்தவும் வசதிகள் வழங்கப்படுகின்றன. இதன் பொருட்டு யாழ். குடாநாட்டில் தற்பொழுது 13 கிளைகளும் 3 நீடித்த கருமபீடங்களும் சேவையாற்றுகின்றன. அதுமட்டுமன்றி விசேட வைபவங்களில், கண்காட்சி மண்டபங்களில், கோவில் விழாக்களில் எமது கருமபீடங்கள் அமைப்பது, நடமாடும் சேவையை நடாத்துவது என்பன நடைமுறைப் படுத்தப்படுகின்றன. மக்கள் முற்றாக மீளக் குடியமர்ந்ததும், தேவை கருதி மூடப்பட்ட கிளைகளான புங்குடுதீவு, பளை, நல்லூர் கிளைகளை அந்தந்த இடங்களில் மீள ஆரம்பித்தல், மற்றும் தற்காலிகமாக யாழ்.நகரில் இயங்கும் காங்கேசன்துறைக் கிளையை மீள உரிய இடத்திற்கு எடுத்துச் செல்லல் என்பனவும் எதிர்காலத் திட்டங்களாகும்.

மாணவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவித்து, அவர்களின் எதிர்காலத்தை வளமுறச் செய்ய "சிசு உதான" சேமிப்புத் திட்டத்தை பாடசாலைகள் மூலம் நடைமுறைப்படுத்தி அவர்களையும் வங்கி வாடிக்கையாளராக்கவும் உள்ளோம்.

சேதமுற்ற வீதிகள், பாடசாலைகள், தொழிற்சாலைகள் மற்றும் அரச நிறுவனங்களை மீள அமைப்பதற்குத் தேவைப்படும் பணத்தினை வங்கி மூலமாக பிற நிறுவனங்கள் செயற்படுத்தப் பங்காளியாதல், ஒப்பந்தக்காரருக்கு முற்பணங்கள், உத்தரவாதங்கள் என்பன வழங்கி அவர்கள் தமது தொழிலைச் செய்யவும் -

அதனால் புனர்நிர்மாணப் பணிகள் துரித கதியில் நடைபெறவும் ஒத்துழைத்தல், புதிய தொழில்களில் ஈடுபடுவோருக்கு வங்கிக் கணக்குகளை ஆரம்பிக்க உதவுதல், கடன் வசதிகளைச் செய்து கொடுத்தல், ஏற்றுமதி இறக்குமதி தொடர்பாக வங்கி அலுவல்களைச் செய்து கொடுத்தல் என்பன போன்ற திட்டங்களும் மேற்கொள்ளப்படவுள்ளன.

யாழ்.குடாநாட்டு வாடிக்கையாளர், குடாநாட்டுக்கு வெளியேயுள்ள 89 தன்னியக்க இயந்திரங்கள் மூலம் பணம் பெறமுடியும்.

யாழ். குடாநாட்டுக்குள்ளும் 24 மணிநேரமும் பணம் பெற வசதியாக "பெற் காட்" வழங்குதல் நடைமுறையிலுள்ளது. ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணத்திலுள்ள PET இயந்திரம் மூலம் 24 மணிநேரமும் பணம் பெற முடியும். ஒரு நாளைக்கு ஆகக் கூடிய தொகையாக ரூபா 20,000 பெறமுடியும்.




இன்னும் யாழ். பிரதான வீதிக் கிளை, கன்னாதிட்டிக் கிளை, பல்கலைக்கழகக் கிளை, சுன்னாகம் கிளை என்பன கணினி மயப்படுத்தப்பட்டுள்ளன.

நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அடகு பிடிக்கும் தொழில் மீண்டும் எல்லாக் கிளைகளிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் உள்ளவர்களிடமிருந்து "வெஸ்ரேன் யூனியன்" மூலம் உடன் பணம் பெறும் வசதியானது, தொலைபேசி வசதிகள் உள்ள சகல கிளைகள் மூலமும் மேற்கொள்ளப்படுகின்றது.

நவீன மயப்படுத்தப்பட்ட பல்வேறு வசதிகளும் யாழ்.குடாநாட்டு மக்களுக்கும் கிடைக்கச் செய்வதன் பொருட்டு - குறித்த விடயங்கள் தொடர்பாக ஊழியர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டு, அவர்கள் ஊக்குவிக்கப்பட்டு, வாடிக்கையாளர்களைக் கவரும் விதமான சேவையை வழங்குவதை நோக்காகக் கொண்டு திட்டங்கள் தீட்டப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

**நேர்காணல்:**
**ஸ்ரீநடா**

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | யாழ்ப்பாணம் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சுன்னாகம் | சங்கானை | பருத்தித்துறை | சாவகச்சேரி | கொடிகாமம் | ஊர்காவற்துறை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| முருங்கைக்காய் | 40/- | 20/- | 20/- | 35/- | 25/- | 20/- | 20/- | 30/- | 30/- |
| வெங்காயம் | 55/- | 50/- | 40/- | 45/- | 40/- | 50/- | 50/- | 50/- | 60/- |
| பச்சை மிளகாய் | 50/- | 50/- | 40/- | 45/- | 55/- | 40/- | 40/- | 40/- | 60/- |
| கத்தரிக்காய் | 50/- | 70/- | 40/- | 50/- | 50/- | 50/- | 40/- | 40/- | 60/- |
| பாவற்காய் | 60/- | 60/- | 35/- | 60/- | 45/- | 40/- | 40/- | 50/- | 40/- |
| பயிற்றங்காய் | 35/- | 20/- | 10/- | 30/- | 25/- | 20/- | 15/- | 25/- | 30/- |
| வெண்டி | 25/- | 20/- | 12/- | 15/- | 45/- | 30/- | 20/- | 45/- | 20/- |
| உருளைக்கிழங்கு | 80/- | 70/- | 60/- | 75/- | 75/- | 80/- | 60/- | 75/- | 70/- |
| பீற்றூட் | 20/- | 10/- | 08/- | 10/- | 10/- | 12/- | 20/- | 10/- | 15/- |
| கரட் | 40/- | 25/- | 30/- | 40/- | 35/- | 30/- | 30/- | 35/- | 40/- |

# கைத்தொழில் அபிவிருத்தியில் வடபகுதி வர்த்தக வங்கிகளின் பங்களிப்பு!




கடந்த பல வருடங்களாக இடம்பெற்ற போரின் காரணமாகவும் அதனால் ஏற்பட்ட இடம்பெயர்வுகளினாலும் பாதிப்படைந்த பிரதேசங்களில் அபிவிருத்தியை மேற்கொள்ள எத்தனிக்கும் இக்காலகட்டத்தில்; ஓர் பிரதேசத்தின் கைத்தொழில் ரீதியான அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்லும்போது, அக்கைத்தொழிலின் செயற்பாட்டுக்கு முக்கிய துணை நிலைச் சேவையாக விளங்கும் வர்த்தக வங்கிகளின் செயற்பாடுகள் பற்றி ஆய்வு செய்தலானது - அவசியமானதாகப்படுகின்றது.

தற்போதுள்ள வடபகுதி கைத்தொழிலாளர்களது நிலைமையானது - பொருளாதார ரீதியிலும் சரி, தொழில்நுட்ப ரீதியிலும் சரி பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. ஏனெனில் - தொடர்ச்சியான குண்டு வீச்சுக்களாலும், ஷெல் தாக்குதல்களாலும் பாதிப்படைந்த கட்டடங்களையும், அதன் விளைவால் துருப்பிடித்த இயந்திரங்களையும் கொண்டுள்ள வடபகுதி கைத்தொழிலாளர், தமது மூலதன முதலீட்டுப் பொருட்களை இழந்த நிலையிலும், தொடர்ச்சியாகத் தொழிலை நடாத்த முடியாமை காரணமாக எழுந்த வருமான இழப்பினையும், சேமிப்புக்கள் எதுவுமற்றநிலையில் - கைத்தொழில்களை, புனர்நிர்மாணம் செய்வதற்கான அரச உதவிகளோ, வெளிநாட்டு உதவிகளோ எதுவுமற்ற நிலையிலும் தமது கைத்தொழில்களைத் தமது ஜீவனோபாயத்திற்காக மீண்டும் ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில் - வடபகுதி வர்த்தக வங்கிகளின் நிலைப்பாடு என்ன என்பதனை ஆய்வு செய்வதாவது ஓர் பொருத்தமானதாகவே காணப்படுகின்றது. இன்று வடபகுதியில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் உள்ளடங்கலாக மொத்தமாக 34 வர்த்தக வங்கிக் கிளைகள் காணப்படுகின்றன. இவற்றில் யாழ்ப்பாணத்தில் மட்டும் 26 வங்கிக் கிளைகள் காணப்படுகின்றன. இவற்றில் 3 தனியார் வங்கிகளும் உளளடக்கப்பட்டுள்ளன.

இவ்வளவு தொகையான வங்கிக் கிளைகளைக் கொண்டுள்ள போதிலும் இப்பிரதேசங்களின் பொருளாதார அபிவிருத்தி, வளர்ச்சிக்கு இவ்வங்கிகள் எவ்வளவு தூரம் பங்களித்துள்ளன?

வர்த்தகவங்கிகளின் செயற்பாட்டை பொறுத்தவரையில் அவர்களது செயற்பாட்டின் பிரதான நோக்கமாக அமைவது சேமிப்புக்களை ஏற்பதாகவும், அதனை மையமாக வைத்துக் கடன் வழங்குவதாகவும் அமைந்துள்ளது.

ஏனைய மாவட்டங்களைவிட வட பகுதியைப் பொறுத்தவரையில் கலாசாரத்துடன் இணைந்ததாக சேமிக்கும் பழக்கமானது காணப்படுகின்றது. இக்கலாசாரமானது - ஏனைய மாவட்டங்களைவிட உயர் சேமிப்புக்களைத் திரட்டக்கூடிய வாய்ப்புக்களை வழங்கியுள்ளது. வெளிநாடுகளில் உள்ள பெரும் எண்ணிக்கையானோரின் காரணிப் பாய்ச்சலும், திருமணத்தின்போது வழங்கப்படும் சீதனமும் யாழ்மாவட்டத்தின் உயர் சேமிப்பினைத் திரட்டுவதற்குப் பின்புலமாக இருக்கும் பொருளாதாரக் காரணிகளாகும்.

இவ்வாறு திரட்டப்படும் சேமிப்பானது இவ்வங்கிகளுக்குப் பொருளாதார ரீதியில் நன்மை பயப்பதாகவே காணப்படுகின்றது. ஏனெனில் இங்கு திரட்டப்படும் சேமிப்புக்களுக்கு ஆகக் கூடிய வட்டித் தொகையாக 10-12% அளவே வட்டி வர்த்தக வங்கிகளால் செலுத்தப்படுகின்றது. அதேவேளையில் இவ்வர்த்தக வங்கிகள் தாம் கடனாக வழங்கும் தொகைக்கு 13 - 23.5% வரையில் வட்டியை அறவிடுகின்றன. இக்கடன்கள் அரசாங்கத்தினால் உத்தரவுபடுத்தப்பட்டு இருந்தால் மட்டுமே இவ்வட்டி விகிதம். அரசாங்கத்தால் உத்தரவாதம் அளிக்கப்படாத கடன்களுக்கு 12-33% வரை வட்டியாக அறவிடப்படுகின்றது.

வர்த்தக வங்கிகள் பல வகையான வியாபார நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளபோதிலும், வைப்புக்களை ஏற்பதும் அவற்றினை கடனாக வழங்குவதும் அவ்வங்கிகளின் முக்கிய செயற்பாடாக அமைவதனால் - இவ்வங்கிகள் இப்பகுதியில் திரட்டும் சேமிப்பானது இவ்வங்கிகளுக்கு மிகுந்த பொருளாதார இலாபத்தினை வழங்குவதுடன் வங்கிகளின் திரவத்தன்மை நிலையையும் பாதுகாக்கின்றது. ஏனெனில்- ஓர் வர்த்தக வங்கியினது திரவத்தன்மை பாதிக்கப்படும்போது அவ்வங்கியினது பணச் சந்தையில் பணத்தினைக் கடனாக திரட்ட வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட, அங்கு 12.5%-14% வரைக்கும் வட்டியினை செலுத்தவேண்டிய நிலைக்கு இவ்வர்த்தகர்கள் தள்ளப்படுவார்கள்.

ஒப்பீட்டுரீதியில் வங்கிகள் வைப்புக்களைத் திரட்டுவது இங்கு இலாபகரமானதாகக் காணப்படுகின்றது. ஏனைய மாவட்டங்களைவிட, வடபகுதியில் உருவாக்கப்படும் சேமிப்பானது வேறு எந்த முதலீட்டு நோக்கத்திற்காகவும் செலவு செய்யப்படுவதில்லை. ஏனெனில் இங்கு பங்குச்சந்தையோ அல்லது திறைசேரி உண்டியல்களோ அல்லது திபெஞ்சர்கள், வணிகத்தாள்களோ இல்லாத நிலையில் சேமிக்கப்படும் முழுப்பணமும் அப்படியே நிலையான வைப்பிலோ அல்லது சேமிப்பு வைப்பிலோ வைப்பில் இடப்படுகின்றது. இதனால் இவ்வர்த்தக வங்கிகள் மிகவும் குறைந்த வட்டி விகிதத்தில் தமக்குத் தேவையான நிதியைத் திரட்டக் கூடிய வாய்ப்புக்களைக் கொண்டுள்ள நிலை இங்கு உருவாக்கப்பட்டுள்ளது.

போரின் காரணமாக - வருமான, தொழில், சொத்துக்களை இழந்த கைத்தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்களிடம் - இவ்வங்கிகள் கடனை வழங்குவதற்கு எதிர்பார்க்கும் சொத்துக்கள் அவர்களிடம் இல்லாத நிலையில், அவர்கள் இவ்வங்கிகளிடம் இருந்து கடன் பெறுவது இயலாத காரியமாகின்றது.

வர்த்தக வங்கிகளைப் பொறுத்தவரையில் அவ்வங்கிகள் தமது சொந்தப் பணத்தினைக் கடனாக வழங்குவதில்லை. தம்மிடம் வைப்பில் இட்டவர்களுடைய பணத்தினையே அது கடனாக வழங்குகின்றது. தம்மிடம் வைப்பில் இட்டவர்கள் பணத்தினை மீளக்கோரும்போது அதனைச் செலுத்துவதற்கு ஆன பொறுப்பினை இவ்வங்கிகள் கொண்டுள்ளன என்பது மறுக்க முடியாது. ஆனால் பொதுவாக வங்கிகளின் செயற்பாடுகளின் போது எழுகின்ற Credit risk, Market risk, Liquidity risk, Operation risk என்பனவற்றில் Credit risk இனைத் தவிர்ப்பதற்கு ஒவ்வொரு வங்கிகளும் ஒவ்வொரு வகையான முறைகளைக் கையாளுகின்றன.

எனினும் - எந்தவோர் வங்கியும் பின்வரும் ஆய்வுகளை மேற்கொண்டே ஒருவர் கடன் பெறத் தகுதியுள்ளவரா என்பதனை தீர்மானிக்கும். கடன் வழங்க எண்ணியுள்ள வாடிக்கையாளரின் முகாமைத்துவத் திறமை, அவர் ஈடுபட்டுள்ள தொழிலின் வளர்ச்சி, அதற்கு எதிர்காலத்தில் இருக்கும் சந்தை வாய்ப்புக்கள், தற்போது உள்ள அவரது நிதி நிலைமை, அவர் ஈடுபட்டுள்ள தொழிலின் இலாபத் தன்மை, கடந்த காலங்களில் அவரது நிறுவனத்தின் செயற்பாட்டால் வருவிக்கப்பட்ட நிதியை அவர் பிரயோகித்த விதம் என்பன ஆய்வு செய்யப்பட்டே அவர் கடன் பெறத் தகுதியுள்ளவரா என்பதனை இவ்வங்கிகள் தீர்மானிக்கும்.

ஆனால் - இந்த ஆய்வுகள் எல்லாம் சுமுகமான ஓர் பொருளாதாரத்தில் இயங்கும் நிறுவனங்களுக்கும், தனிப்பட்ட மனிதர்களுக்கும் பொருந்துமே தவிர, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஓர் பொருளாதாரத்தில் இயங்குகின்ற நிறுவனங்களுக்கு இக்கணிப்பீடுகள் முற்றிலும் பொருந்தாது. பொருளாதார உட்கட்டமைப்புக்கள் அழிக்கப்பட்ட, பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட பிரதேசத்தில் எவ்வாறு இவ்வங்கிகள் பொருளாதார ரீதியான Security வசதிகளை எதிர்பார்க்கமுடியும். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தில் இயங்குகின்ற நிறுவனங்களுக்கும், தனிப்பட்ட தொழில் முயற்சியாளர்களுக்கும், (விவசாயிகள், மீனவர்கள்) எவ்வாறு பொருளாதார ரீதியில் உதவமுடியும் என்பதனை இவ்வங்கிகள் ஆய்வுசெய்து கடன் வழங்கும் நிலை உருவாக வேண்டும். இதற்காக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தின் பிரதேச அபிவிருத்தியை எவ்வாறு மேற்கொள்ள முடியும் என்பதனை ஆய்வுசெய்து, அதற்கான ஓர் செயற்திட்டம் ஒன்று வருவிக்கப்படவேண்டும். அதன் அடிப்படையில் இவ்வங்கிகள் தமது பொருளாதார ரீதியிலான பங்களிப்பினை இப்பிரதேச அபிவிருத்திக்கு நல்க முடியும்.

இப்பகுதியில் செயற்திட்டங்களை மேற்கொண்டும் அரச சார்பற்ற நிறுவனங்களும், இப்பகுதி அபிவிருத்திக்காக உதவ முன்வந்துள்ள வெளிநாட்டு நிறுவனங்களும் இந்த நிலைமையை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். அதற்கேற்ப தமது செயற்திட்ட நிதிகளை வழங்க வேண்டும். அத்துடன் அந்த நிதிகளை உரியவர்களுக்குப் போய்ச் சேருகின்றதா எனக் கண்காணிக்க வேண்டும். ஏனெனில, வடபகுதியில் இருவகையான பொருளாதாரங்களைச் சார்ந்த சமூகங்கள் இன்று உருவாக்கப்பட்டுள்ளார்கள். ஒன்று போரின் காரணமாகத் தமது பொருளாதாரத்தினை உயர்த்திய சமூகம்; இச்சமூகமானது போரின் காரணமாக வெளிநாடுகளுக்கு இடம்பெயர்நது சென்று அங்கு தொழில்களை மேற்கொண்டு தமது, தம்மைச் சார்ந்த பந்தங்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தியுள்ளவர்கள். ஏனையோர் போரின் விளைவால் ஏற்பட்ட பொருளாதாரத் தடையையும் அதன் மூலமாக எழுந்த செயற்கை தட்டுப்பாட்டின் காரணமாக உச்ச இலாபம் பெற்ற வர்த்தகர்கள். மற்றைய பொருளாதார சமூகமானது போரின் காரணமாக முற்றுமுழுதாக பாதிக்கப்பட்ட சமூகம். இவற்றில் விவசாயிகள், மீனவர்கள், கைத்தொழிலாளர்கள் சிறிய தனிப்பட்ட தொழிலில் ஈடுபட்டவர்கள், தனியார்துறைசார் தொழிலாளர்கள் அடங்குகின்றனர். இவ்வாறு இரு வேறுபட்ட பொருளாதார சமூகத்தினைக் கொண்டுள்ள பொருளாதாரத்தில் வழங்கப்பட வேண்டிய திட்ட உதவிகள் யாவும் உண்மையில் போரினால் பாதிக்கப்பட்ட சமூகத்திற்குச் சென்றடையவேண்டும் என்பதில் பல செயற்திட்டங்களை மேற்கொள்ளும் அரச சாபற்ற நிறுவனங்களும் வெளிநாட்டு உதவி வழங்கும் நிறுவனங்களும் அக்கறைகொள்ள வேண்டும்.

# தகுந்த பாதுகாப்பு எதுவுமே இல்லாது பணியாற்றும் துறைமுகத் தொழிலாளர்!



1995ஆம் ஆண்டுக்கு முன்னர் குடாநாட்டு மக்கள் அனைவரினதும் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்திசெய்து வந்த பருத்தித்துறை துறைமுகத்தினையும் அங்கு பணிபுரியும் தொழிலாளர்களையும் எவரும் மறந்திருக்க முடியாது. ஏ-9 வீதி திறக்கப்பட்ட பின்னர் இத்துறைமுகம் மீது இருந்த அனைவரினதும் கவனம் குறைந்து கொண்டு வருகிறது. தற்போது இங்கு பணிபுரியும் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அவர்களின் குடும்பங்களின் பட்டினி வாழ்க்கை எவருக்குத் தெரியும்?

## பருத்தித்துறை துறைமுகத்தில் பரிதாப நிலை

இராணுவக் கட்டுப்பாடு இல்லாத காலப் பகுதியில் - கட்டடப் பொருட்கள், சிமெந்து வகைகள், உரவகை போன்றன தடை செய்யப்பட்டிருந்தன. தற்போது தடைகள் நீக்கப்பட்டு பொருட்கள் கப்பல் மூலமும் வருகின்றன. சிமெந்துப் பைகளை தொழிலாளர்கள் கைகளுக்கோ, முகத்திற்கோ எதுவித பாதுகாப்பு உறைகளையும் அணியாது அகற்றி வருகின்றனர். இதற்குக் காரணம் மேலதிகாரிகள் இவர்களுக்குரிய பாதுகாப்பு உறைகள் எவற்றையும் வழங்குவதுமில்லை. அவற்றைப்பற்றி அக்கறையும் எடுப்பதில்லை. இதன் விளைவு - சில மாதங்களுக்கு முன்னர் சிமெந்துத் தூள்களை சுவாசித்ததால் சுவாசக் கோளாறு காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் இரு தொழிலாளர்கள் அனுமதிககபபட்டுச் சிகிச்சை பெற்றனர்.

இதனால் இவர்கள் தமது தொழிலைக் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டது. கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் ஒரு தடவை மட்டும் வெளிநாட்டுத் தேர்தல் கண்காணிப்பாளர்களது பார்வை இவர்கள் மீது படாது இருப்பதற்காகவும் வாக்குகளைப் பெறும் நோக்குடனும் இவர்களுக்குப் பாதுகாப்பு உறைகள் வழங்கப்பட்டன.

எதுவித மருத்துவ வசதிகளோ, ஏனைய வசதிகளோ அற்ற நிலையில் பணிபுரியும் இவர்களுக்கு விபத்து ஏற்படுமானால் இவர்களைத் தொழிலுக்கு அனுப்பும் சங்கங்களின் சமாசமே, அங்கு பணிபுரியும் தொழிலாளர்களிடம் இருந்து பெறப்படும் சிறுதொகை நிதியிலிருந்தே அவர்களுக்கான வைத்தியச் செலவை வழங்கி வருகிறது. தொழிலாளர்களுக்கு கடந்த 6 ஆண்டுகளாக மதியவேளையில் தேனீர், பணிஸ் ஆகிய உணவுப் பொருட்களே வழங்கப்பட்டு வந்தன. அதிலும் கடந்த ஒரு வருடமாக இவர்களுக்குத் தேனீர் மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. தமது பணியைச் செய்து வருகின்ற இத்தொழிலாளர்கள்- தமது வேலைச் சுலபத்திற்காக சுமைகளைத் தூக்கப் பாவிக்கும் ஊக்குகளைக் கூட பாவிக்கத் துறைமுக அதிகாரிகள் தடை விதித்துள்ளார்கள். கப்பல் சிப்பந்திகளால் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் பொருட்களைக் கூட தொழிலாளர்கள் எடுத்துச்செல்ல அனுமதிப்பதில்லை. தொழிலாளர்களின் நாளாந்தக் கூலி கூட பல நாட்களின் பின்னரே வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றையெல்லாம் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள அரச அதிபர் சீர் செய்வாரா? யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், பட்டினியால் வாடும் தொழிலாளர்களின் குடும்பங்களின் கண்ணீரைத் துடைப்பார்களா? இவர்களுக்கு யார் மறுவாழ்வு தருவார்கள்? பல எதிர்பார்ப்புகளுடன் தொழிலாளர்கள் காத்திருக்கிறார்கள்.

- இ.ஜெயசீலன்
(புலோலிச் செய்தியாளர்)



நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

முறைபடச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பாடு இலாஅ தவர்

- திருக்குறள்

# நமது நோக்கு

## கண்துடைப்பு முயற்சிகள்!

யாழ்.குடாநாட்டில் - பொதுமக்களது வசிப்பிடங்களையும், விளைநிலங்களையும், பாடசாலைகளையும், வணக்கத்தலங்களையும் உள்ளடக்கி உருவாக்கப்பட்ட - அதியுயர் பாதுகாப்பு வலயங்களை நீக்குவதிலும், தளர்த்துவதிலும் தற்போதைக்கு எந்தவித மாற்றங்களும் செய்யப்படமாட்டாதென்பதை இராணுவத் தரப்பு உறுதியாக அறிவித்துள்ளது.

யாழ்.செயலகத்தில் நடைபெற்ற மாநாட்டில் - இராணுவத் தரப்பிடமிருந்து சில நல்ல பதில்களாவது கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் வந்திருந்த பொது ஜன அமைப்புக்களது பிரதிநிதிகள் இதனால் பலத்த ஏமாற்றமடைந்தனர்.

தற்போது ஏற்பட்டுள்ளது யுத்த நிறுத்தமே என்றும், நிரந்தர அமைதியின் பின்னரே - தமது நிலைகளைத் தளர்த்துவது பற்றி படைத்தரப்பு பரிசீலனை செய்யும் என்றும் அங்கு கூறப்பட்டது.

இராணுவத்தின் இந்த நிலைப்பாடானது - யாழ். மாவட்டத்தில், புனர்வாழ்வு - புனரமைப்பு - மீள்குடியேற்றம் ஆகியவற்றை முன்னெடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் வழிமுறைகளில் ஒரு தடைக்கல்லாகவே அமைந்திருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் அபிவிருத்திப் பணிகளைச் செய்வதற்குத் தீவிரமாக இறங்குவதற்கு முன்னரேயே - இம்முட்டுக்கட்டைகள் அகலாமலிருப்பது, துரதிஷ்டமான நிலை என்றே கூறவேண்டும்.

மக்களிடம் இயல்புநிலையை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கம் உண்மையானதாக இருக்கும் பட்சத்தில் - எந்த வகையில் நியாயப்படுத்தக் கூடியதாக இருந்தாலும், இராணுவத்தின் நலன் என்பது இரண்டாம் பட்சமானதே.

அதுவும் - குடாநாட்டின் குறிப்பிடத்தக்க பெரும் பிரதேசங்களான - வலிகாமம் வடக்கு, வடமராட்சி கிழக்கு, தென்மராட்சியின் சில பகுதிகள், யாழ்.மாநகரக்கரையோரம் மற்றும் அரியாலை ஆகியவற்றிலிருந்து பெருந்தொகை மக்கள் - தமது சொந்த இடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு, மீளக்குடியேறாத பட்சத்தில்-யாழ்ப்பாணத்தின் அபிவிருத்தி என்பது, எவ்வளவு தூரத்திற்குச் சாத்தியமாக முடியும் என்பதை மறந்து -

இராணுவ நலன்களை மட்டும் முன்னிறுத்துவது பொருத்தப்பாடானதா என்பதைப் படைத்தரப்புச் சிந்திக்க வேண்டும்.

நிரந்தர அமைதியின் பின்னரே தளர்வுகள் என்ற நிலையில் படைத்தரப்பு இருக்கும்போது -

பொதுமக்கள் மீளக்குடியேற்றப்பட்டு, சகஜ வாழவு திரும்பும்போதும், புனர்வாழ்வு - புனரமைப்பு நடவடிக்கைகள் தீவிரம் பெறும்போதுமே - அவை நிரந்தர அமைதிக்கு வலுச்சேர்க்கும் அடித்தளமாக அமையும் என்பதை இராணுவத்தரப்பு கவனத்திற் கொள்ள வேண்டும்.

நேற்று முன்தினத்தைய மாநாட்டைப் பொறுத்த வரையில் - எந்தவித இலக்கையும் எட்டத் தவறிய நிலையில் முடிவடைந்த - மாநாடாகவே அதனைக் கருதமுடியும்.

இந்த மாநாட்டின் எதிர்பார்ப்புக்களுக்குக் கிடைத்த பின்னடைவானது - ஒருபுறம், யாழ்ப்பாண மீள்நிர்மாணத்திற்கு கிடைத்துள்ள தடையென்பதோடு, மறுபுறம் - இனிவரும் காலத்தில், இவ்வாறான மாநாடுகளின் பயன் என்ன என்பதைப் பற்றியுமான வினாவையும் எழுப்பியுள்ளது.

அதாவது - படைத்தரப்பு நலன்களைத் தொடர்ந்து வலியுறுத்தும் இத்தகைய மாநாடுகளின் வெளிப்படுத்தல்கள் மீதான எதிர்பார்ப்பு கேள்விக்குள்ளாவதே இதன் உட்கிடக்கையாகும்.

இதன்படி - மீள்குடியேற்றத்தை நடைமுறைப்படுத்தவும், சமூக வாழ்வு திரும்பவுமான சூழலை ஏற்படுத்த வேண்டுமானால் - அது அரசாங்கத்தின் நேரடி நடவடிக்கைகளால் மட்டுமே முடியும் என்பது புலனாகின்றது.

எனவே - தமிழ் மக்களின் சகஜ வாழ்வில் -நேர்மையான அக்கறை அரசாங்கத்துக்கு இருப்பதை நிரூபிக்க வேண்டுமானால் - உடனடியாகவே இவ்விடயங்களில் தலையிட்டு, உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி, மக்களை மீளக்குடியமர்த்த அரசாங்கம் ஆவன செய்யவேண்டும்.

அதைவிடுத்து - இவ்வாறான மாநாடுகள் தொடர்வது, வெறும் கண்துடைப்பு நடவடிக்கையாகவே, தமிழ் மக்களை ஏமாற்றும் ஒரு முயற்சியாகவே கருத வேண்டி வரும் என்பதைச் சம்பந்தப்பட்டோர் உணர வேண்டும்.

# தேர்தலை சந்திக்காமலேயே புதிய அரசை நிறுவ முடியும்

## எதிர்க்கட்சித் தலைவர் 'நமது ஈழநாடு'க்குத் தெரிவிப்பு

(கொழும்பிலிருந்து அருள்)

'அரசியலமைப்பின் 19வது திருத்தத்தின் மூலம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறுவோமென நினைத்திருந்த ஐ.தே.க அரசாங்கம் தனது கனவு நிறைவேறாத நிலையில் ஸ்திரமற்ற அரசாங்கமாக மாறியிருக்கிறது. எனவே, தற்போதைய நிலையில் தேர்தலுக்குச் செல்லாமல் புதிய அரசாங்கமொன்றை அமைக்க எங்களால் முடியும்' இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ச நமது ஈழநாட்டுக்குத் தெரிவித்தார்.

தற்போதைய அரசியல் சூழல் பற்றி நமது ஈழநாட்டுக்கு அவர் அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது-

தனிக்கட்சியாக அரசாங்கத்தை அமைக்கும் முயற்சி 19வது திருத்தத்துக்கு எதிரான உயர் நீதிமன்றத் தீர்ப்பினால் பின்தள்ளப்பட்டு விட்டது.



இதனால் வேறு வழியின்றித் தேர்தல் மூலம் ஆட்சியை தக்க வைத்துக் கொள்ள ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கிறார்.

ஆனால் புதிதாகத் தேர்தலொன்றை நடாத்துவதற்கு நாடு தயாரில்லை. நாமும் விட்டுக்கொடுக்க மாட்டோம்.

புதிய தேர்தலுக்கான அவசியமொன்று இல்லாத நிலையில்- அரசாங்கத்தை அமைத்துக்கொள்ள எங்களால் முடியும் என மஹிந்த ராஜபக்ச மேலும் கூறினார்.

# தனியார் மயமாக்கலை நிறுத்துக! அமைச்சர்கள் ரணிலிடம் கோரிக்கை!!

(கொழும்பிலிருந்து அருள்)

அரசாங்கத்தின் தனியார் மயமாக்கல் கொள்கையையும், திட்டங்களையும் தற்காலிகமாக நிறுத்துமாறு சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளனர்.

19வது திருத்தத்துக்கு உயர் நீதிமன்றம் அனுமதிக்காத நிலையில்- மக்கள் செல்வாக்கு குறைந்திருப்பதாலும்,

தனியார் மயமாக்கலுக்கு எதிராக பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பியும் இணைந்து பகிரங்கக் கூட்டங்களையும் ஹர்த்தால்களையும் பெருமெடுப்பில் நடாத்தத் தீர்மானித்திருப்பதாலும்,

தனியார் மயமாக்கலை மிதமாக்கிக் கொள்வதே சிறந்த வழி என இந்த அமைச்சர்கள் பிரதமர் ரணிலிடம் எடுத்துக் கூறியுள்ளனர்.

தனியார் மயமாக்கல்- ஐ.தே.க தொழிற்சங்கங்கள் வழியிலும் எதிர்ப்புக்களை தோற்றுவித்துள்ளதால், இவ்விடயத்தில் நிதானமான போக்கே தேவையானதென்பதையும் இவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# ஹக்கீமை தாய்லாந்து அனுப்புவதில் மு.காவுக்குள் கருத்து முரண்பாடு!

## நிபந்தனையின் பேரில் இறுதியில் சம்மதம்

(கொழும்பு)

தாய்லாந்துப் பேச்சுக்களின் போது அமைச்சர் ரவூப் ஹக்கீம் முஸ்லிம் மக்களின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் நடந்து கொள்ள வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரசின் உயர்மட்ட மாகாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

தாய்லாந்துப் பேச்சுக்களில் ரவூப் ஹக்கீம் கலந்து கொள்வதை அனுமதிப்பது என்றும் இப்பேச்சுக்களில் முஸ்லிம் மக்களின் நலன்களில் கவனம் செலுத்தும் வகையில் நடந்து கொள்ள வேண்டும் என்றும் நேற்று முன்தினம் இரவு தீர்மானிக்கப்பட்டது. இம் மாநாட்டில் பாராளுமன்ற பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்த அதாவுல்லா, நூர்தீன் மசூர் ஆகியோரும் கலந்து கொண்டனர். ஹக்கீம் தாய்லாந்து செல்வதை முதலில் பலமாக எதிர்த்த மேற்படி இருவரும் முஸ்லிம் மக்களின் நலன் கருதி மேற்படி தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவிப்பதாக பின்னர் அறிவித்தனர்.

# மாவட்ட அபிவிருத்திச் சங்கக் கூட்டத்துக்கு சென்ற எம்.பி. படையினரால் தடுப்பு!

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி சபைக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகக் கச்சேரிக்குச் சென்ற, பாராளுமன்ற உறுப்பினர் ஞா.கிருஷ்ணபிள்ளையைத் தடுத்து நிறுத்திய இராணுவத்தினர் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு மட்டு. மாவட்ட எம்.பிக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தலைமையில் மாவட்ட அபிவிருத்திச்சபைக் கூட்டம் நடை பெற்றது. அக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணபிள்ளையை இராணுவத்தினர் உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. இதையிட்டே நடவடிக்கை எடுக்கும்படி கோரப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை தடுப்பது சிறப்புரிமையை மீறும் செயலாகும். இவ்வாறான அடாவடித்தனங்களை இனி மேல் இடம்பெற அனுமதிக்கக்கூடாது. சம்பந்தப்பட்ட இராணுவத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கூட்டத்தில் சமூகமளித்து வந்த இராணுவ உயர் அதிகாரிகளிடம் ஜோசப் பரராஜசிங்கம் கேட்டுக் கொண்டார்.

இச்சம்பவம் குறித்து பிரதமருக்கும், பாதுகாப்பு அமைச்சருக்கும் அறிவிக்கப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஜனாதிபதிக்கான பாதுகாப்பு மேலும் அதிகரிக்கப்பட்டது!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. 19ம் திருத்தச்சட்டத்தை நிராகரித்து உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையடுத்து ஜனாதிபதியின் நிலை பலமடைந்திருப்பதாகவும், இதனால் இவருக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும், இதைத் தொடர்ந்தே இவருக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி கலந்து கொள்ளும் கூட்டங்களுக்கு வருபவர்கள், ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவினரால் கடுமையான சோதனையிடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# குறைதீர் மன்றம்



நாயன்மார்க்கட்டு அம்பாள் வீதியில் நாங்கள் குடியிருக்கும் வீட்டுக் காணிகளின் ஒரு பக்க எல்லையில் கச்சேரி கிழக்குப் பகுதியிலிருந்து செம்மணி வரை செல்லும் பெரும் வாய்க்கால் அமைந்துள்ளது. இப்பகுதியில் மழை காலங்களில் வெள்ள நீர் அடித்துச் செல்வதனால் நாம் பல அசௌகரியங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது.

மேலும் எமது குடியிருப்புக் காணிகளில் உள்ள மண் அரித்துச் செல்லப்பட்டு எமது வேலிகள் விழும் நிலையில் உள்ளன. நாங்கள் ஏற்கனவே இது சம்பந்தப்பட்ட பகுதியினருடன் தொடர்பு கொண்டு எதுவித பலனும் கிடைக்கவில்லை.

இது விடயத்தில் மாநகர சபையுடன் தொடர்பு கொண்டு எங்கள் குறையினை நிவர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நி.இராசரத்தினம்,
தி.தருமலிங்கம்,
சா.பத்மநாதன்.
அம்பாள் வீதி,
நாயன்மார்க்கட்டு,
யாழ்ப்பாணம்.

**நமது ஈழநாடு**

தங்களின் குறைபாடு தொடர்பாக மாநகர முதல்வர் செ.கந்தையனை நேரடியாக நமது ஈழநாடு தொடர்பு கொண்ட போது; தங்களது குறைபாட்டைத் தனக்கு நேரடியாக எழுத்து மூலமாகத் தன்னிடம் கொண்டு வந்து தருமாறும், மேலும் 2002 நிதி ஆண்டில் மேற்படி விடயம் தொடர்பாக எந்த நிதியொதுக்கீட்டையும் செய்ய முடியாதுள்ளது எனவும், அடுத்த நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் தங்களது குறைபாட்டை நிவர்த்திக்கத் தான் முயல்வதாகவும் மாநகர முதல்வர் தெரிவித்துள்ளார்.

# இருபது வருட யுத்தத்தில் வெற்றி பெறாமைக்கு அரசியல்வாதிகளே காரணமாக இருந்தனர்

## ஊனமுற்ற படை வீரர்கள் சங்கம் ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

எட்டு இராணுவ மேஜர் ஜெனரல்களை இந்தச் சந்தர்ப்பத்தில் ஓய்வு பெறச் செய்வது பெரும் தவறாகும் என்று அங்கவீனமுற்ற போர் வீரர்கள் சங்கம் கூறுகின்றது.

ஜனாதிபதிக்கு இச் சங்கம் எழுதிய கடிதத்தில்- இருபது வருடங்களாக நடந்த யுத்தத்தின் போது நாட்டுக்கு இந்த உயர் அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் பணி புரிந்துள்ளார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இருபது வருட கால் யுத்தத்தின் போது வெற்றி பெறாததற்குக் காரணம், உயர் அதிகாரிகளின் திறமையின்மை அல்ல. யுத்தத்தை நடத்திய அரசியல்வாதிகளின் குறைபாடுகளே இந்த தோல்விக்கு காரணமாக உள்ளன. தற்போதைய பிரதமர் எடுத்துள்ள அறிவுபூர்வமான முடிவு காரணமாக யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டில் சமாதானம் ஏற்படும் வாய்ப்புக்கள் தென்படுகின்றன.

ஜனநாயக நாடு ஒன்றில் இராணுவம் மிகவும் சக்தி வாய்ந்ததாக இருக்க வேண்டும்.

இதனால் இந்த மேஜர் ஜெனரல்களின் சேவைக்காலத்தை நீடிக்க வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிபிர் விமானத்தின் பாகங்களை எடுத்துச் சென்ற பொதுமக்கள்!

## மீள ஒப்படைக்குமாறு அரசு கோரிக்கை

குளியாப்பிட்டியில் விபத்துக்குள்ளான கிபிர் விமானத்தின் சில பகுதிகள் காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் விபத்து தொடர்பான விசாரணைகளைத் தொடர்ந்து மேற்கொள்ள முடியாமல் உள்ளது என்று விமானப்படை சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த விமானம் விபத்துக்குள்ளானதைப் பார்ப்பதற்கு வந்த பொதுமக்களால் அதன் சில பாகங்கள் எடுத்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்று அந்த சிரேஷ்ட அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இந்த விமானச் சிதைவுகளைத் திருப்பி ஒப்படைக்குமாறு விமானப் படையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# இளவாலை, கட்டுவனில் யூ.என்.எச்.சி.ஆர் உதவி

(மல்லாகம்)

அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலயத்தின் நுண் கருத் திட்டத்தின் கீழ்- இளவாலை வடமேற்கு கிராம அலுவலர் பிரிவில் வருமானத்தை அதிகரிக்கும் பொருட்டு உள்ளீடுகளுக்கான கொடுப்பனவும், சன சமூக நிலைய மண்டப அமைப்பும்,

கட்டுவன் மேற்கில் விவசாய உற்பத்திகளுக்கான ஊக்கு விப்பும் வழங்குவதற்கான திட்ட அமுலாக்கலும் வலி.வடக்கு பிரதேச செயலகத்தினால் யூ.என். எச்.சி. ஆர் இனால் வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (68)

# இருதரப்பும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதால் நிரந்தர சமாதானம் நிச்சயமாக ஏற்படும்!

## மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட நம்பிக்கை

(கொழும்பு)

அரசும் புலிகளும் அர்ப்பணிப்புடன் சமாதான நடவடிக்கையில் ஈடுபடுவதால் நிரந்தர சமாதானம் ஏற்படும் என்ற நம்பிக்கை இராணுவத்துக்கு இருப்பதாக தாய்லாந்து சென்றுள்ள மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட தெரிவித்துள்ளார்.

தாய்லாந்து நோக்கி அவர் பயணமாகிய போது, அவர் விமானத்தில் செய்தியாளர்களுடன் கலந்துரையாடியபோதே மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளும் அரச பிரதிநிதிகளின் இராணுவ ஆலோசகராக இவர் தாய்லாந்து சென்றுள்ளார்.

வடக்கு கிழக்கில் யுத்த நிறுத்தத்தின் கீழ் தற்போது ஏற்பட்டுள்ள அமைதி சூழ்நிலை நிரந்தரமாகும் என்ற நம்பிக்கை இராணுவத்தினருக்கு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.



# பிரபல பாடசாலைகளுக்கு நிகராக 575 பாடசாலைகள் புனரமைப்பு!

(கொழும்பு)

அடுத்த வருடம் நாடு முழுவதும் உள்ள 575 பாடசாலைகள் புனரமைப்புச் செய்யப்பட இருக்கின்றன.

விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், தகவல் தொழில் நுட்பம் போன்ற பாடங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் இந்தப் பாடசாலைகள் புனரமைக்கப்படும் என்று அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு கூறியுள்ளார்.

இதன் மூலம் தற்போது பிரபல பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைத் தவிர்க்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போது ஒரு லட்சத்து 95 ஆயிரம் ஆசிரியர்கள் பணிபுரி கின்றார்கள். இருந்த போதிலும் ஆங்கில ஆசிரியர்களின் எண்ணிக்கை 23 ஆயிரம் மாத்திரமே. ஆயினும் ஆங்கில மொழிமூலம் பாடத்தினைப் போதிக்கும் ஆற்றல் இந்த ஆசிரியர்களிடம் மிகவும் குறைவாக இருக்கின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# உயர் பாதுகாப்பு வலயத்தில் கட்டடங்கள் அழிப்பு

## வலி. வடக்குப் பிரதேசசபை கண்டனம்

(மல்லாகம்)

இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள கட்டடங்கள் இடிக்கப்பட்டு வரும் செயல்களுக்கு வலி-வடக்கு பிரதேச சபை கண்டனம் தெரிவித்துள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர், மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று மீளக்குடியமர்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்ற வேளை-இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள வலி. வடக்கு பிரதேசத்தின் கட்டடங்கள் இடிக்கப்படுவதை வன்மையாக கண்டிப்பதோடு, இந் நடவடிக்கையைத் தடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. (68)

# குண்டுவெடிப்புடன் துப்பாக்கிச் சத்தம் கேட்க கூடியிருந்த தமிழர்கள் சுருண்டு விழுந்தனர்!

## திருமலைச் சம்பவத்தில் காயமடைந்தவர் நீதிமன்றில் விபரிப்பு

(நமது நிருபர்)

குண்டுவெடிப்புச் சத்தத்தைத் தொடர்ந்து கடைப்பக்கமாக இருந்து பொலிஸ் உபபரிசோதகர் ஒருவர் கையில துப்பாக்கியைப் பிடித்தபடி ஓடி வருவதைக் கண்டேன். அவர் எம்மை நோக்கி வெடிவைக்கும் தோரணையில் வந்தார். இவ்வாறு நேற்று திருகோணமலை நீதவான் முன்னிலையில் சாட்சியமளித்த ராஜரட்ணம் விநோதராஜ் தெரிவித்தார்.

கடந்த 11ஆம் திகதி திருகோணமலை காந்திநகர் பகுதியில் ஏற்பட்ட குண்டுவெடிப்பு சம்பந்தமான விசாரணை திருகோணமலை நீதவான் எஸ். தியாகேந்திரன் முன்னிலையில் நேற்று முன்தினம் இரண்டாவது தடவையாக நடைபெற்றது.

அன்புவழிபுரத்தைச் சேர்ந்த 28 வயது இளைஞன் ராஜரட்ணம் விநோதராஜ் தொடர்ந்து சாட்சியமளிக்கையில், சம்பவதினம் 9 மணிக்கு நகர்ப் பக்கமாக வரும்போது தமிழ் இளைஞர்களை சிங்கள இளைஞர்கள தாக்குவதாக சில நண்பர்கள் தெரிவித்தார்கள். சம்பவம் நடந்த இடத்திற்கு வரும்போது சிங்கள இளைஞர்கள் ஓடுவதைக் கண்டேன். அவர்களை பொலீசார் துரத்துவதை அவதானித்தேன். நான் முன்நோக்கிச் சென்றேன்.

அல்பா காட்சியறைப் பக்கமாக சென்றேன். அங்கு பொலிசார் சிங்கள மொழியில் ஏதோ கூறிக்கொண்டு இருந்தார்கள். என்ன கூறினார்கள் என்று எனக்குப் புரியவில்லை. பார்த்துக் கொண்டிருக்கும்போது குண்டுச் சத்தம் கேட்டது. நான் நின்ற இடத்தில் இருந்து 20 அடி தொலைவில் குண்டு வெடிதது. அவ்வேளையில் நான் அபயபுரம் பகுதியை பார்த்துக்கொண்டிருந்தேன்.

குண்டு வெடிப்புக் காரணமாக எனது முழங்காலில் காயம் ஏற்பட்டது. குண்டு வெடிப்பைத் தொடர்ந்து துப்பாக்கி வேட்டு சத்தங்களும் கேட்டன. எவரது துப்பாக்கியில் இருந்து வேட்டுக்கள் தீர்க்கப்பட்டது என்பது எனக்குத் தெரியாது. இவ்வேளையில பொலிஸ் உப பரிசோதகர் ஒருவர் கையில் துப்பாக்கியைப் பிடித்துக் கொண்டு கடைப்பக்கமாக இருந்து ஓடி வந்துகொண்டிருந்தார் என்று தெரிவித்தார்.

உப்புவெளி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகா ரத்வத்தை அங்கு சாட்சியமளிக்கையில், சம்பவதினம் காந்தி நகர் பகுதியில் நின்று கொண்டிருந்தோம். இரு சாரார் குழுக்களும அபயபுரம் பகுதி நோக்கி தொடர்புபடுவதைத் தடுக்கும முகமாக பாதையின் மத்தியில் நின்று கொண்டிருந்தோம். கோபமாக வந்த குழுவினர் மத்தியில் அமைதியற்ற நிலை இருந்தது. இரு சாராரும் கற்களையும் போத்தல்களையும் வீசிக் கொண்டிருந்தனர்.

உதவிப் பொலிஸ் அத்தியட்சகா சுதேசநாதன் தலையில் அவ்வேளையில் கல் ஒன்று பட்டதால் காயம் ஏற்பட்டது. அதன் பின்னர் அவர் பாலையூற்றுப் பக்கமாகச் சென்றார். ஏனைய எனது உத்தியோகத்தர்கள் காந்தி நகர்ப் பக்கமாக இளைஞர்கள் முன் நோக்கி வராமல் தடுத்து நிறுத்த முற்பட்டோம்.

திடீரென வெடிச்சத்தம் கேட்டது. பல வாலிபர்கள் விழுந்திருந்ததைக் கண்டேன். என்னுடன் இருந்த நவரெட்ண, சேனக ஆகிய இருவரும் காயமடைந்தனர்.

அவ்வேளையில் தமிழ் இளைஞர்கள காயமடைந்தவர்களை பின் நோக்கி எடுத்துச் சென்றனர். நிலைமை மிக மோசமாகக் காணப்பட்டது.

காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல எனது பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 48-2083 இலக்க ட்ரக் வண்டியைப் பயன்படுததினேன். காயப்பட்டவர்களை பிரதான பாதை ஊடாக எடுத்துச் செல்வதற்கு முடியாதவாறு பாதை தடுக்கப்பட்டது. காயப்பட்டவர்களை சிறிவர்ததன ட்ரக் வண்டியில் காந்திநகர் ஊடாக அலஸ் தோட்டத்திற்கு எடுத்துச் சென்றார். அலஸ்தோட்டம் அகதிகள் முகாமிற்கு முன்னால் எமது வண்டியின் முன்பக்க கண்ணாடிகள் அடித்து நொறுக்கப்பட்டது. அங்கிருந்து வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றோம்.

இச்சம்பவம் தொடர்பாக நீதிமன்றத்துக்கு அறிவித்தேன்.

இவ்வேளையில் சாட்சியினை சட்டத்தரணி எஸ்.கே.ரத்னவேல் குறுக்கு விசாரணை செய்தார். அதன் போது- சம்பவம் நடைபெற்ற அன்று கைக் குண்டு பயன்படுத்துவதற்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கவில்லை. இறநதவர்களும் காயமடைந்தவர்களும் தமிழர்கள் என்பதை நான் அறிவேன். சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு சென்ற பொலிசாருக்கு ரி-56 ரக துப்பாக்கிகளும், உப பொலிஸ் பரிசோதகர்களுக்கு 9 மி.மீ. கைத்துப்பாக்கிகளும் வழங்கப்பட்டிருந்தது. எவருக்கும் கைககுண்டுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. வெளியே கொண்டு சென்ற பொருட்கள் பற்றியும், மீண்டும் அவை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு வந்தவை பற்றியும் நாட்குறிப்பேட்டில பதியப்பட்டுள்ளன. உப சேவையில் கடமையாற்றும் சார்ஜன்ட் ஒருவர் இவ் விடயம் சம்பந்தமான பதிவுகளை மேற்கொண்டார் என்றார்.

காலில் காயமடைந்த 5ஆவது சாட்சியான காசிப்பிள்ளை சதீஸ்குமார் என்ற இளைஞன் சாட்சியமளிக்கையில், நான் 621, சம்பா லேன், ஆண்டான்குளம் என்னும் இடத்தில் வசிக்கின்றேன். சம்பவதினம் வேலை விடயமாக 8.30 மணிக்கு புறப்பட்டு அநுராதபுரம் சந்திக்கு சென்றேன். வழியில் தொழில் நுட்பக்கல்லூரி சந்தி, டவுண் பிரதேசங்களில் டயர்கள் எரிந்து கொண்டிருந்தன. துவிச்சக்கரவண்டியில் வந்தேன். சுமார் 1000பேர் வரை டவுண் பக்கமாக நின்றிருந்தனர். நான் அவர்களிடம் போய்வரும் போது காந்திநகர் பக்கமாக சத்தமாக இருந்தது. சத்தமாக இருந்தபடியால் அந்த இடத்திற்கு வந்தேன்.

ஆயபுரம் பகுதிக்கு 4 பேர் போனதாகவும், அவர்களுக்கு அடித்ததாகவும் கேள்விப்பட்டேன். அவர்களை விடுவிக்குமாறு இங்கு இருந்தவர்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். நால்வரையும் மீட்க அபயபுரம் நோக்கி தமிழ் இளைஞர்கள் முன்னேறிக் கொண்டிருந்தார்கள். சிங்களவர்கள் கையில் வாள், கத்தி, பொல்லு, தடிகள் என்பன இருந்தன. எமது பகுதியில் சிலரிடம் தடிகள் இருந்தன. பொலிசார் எங்களை அடக்குவதாக இருந்தார்களே தவிர, அவர்களை மீட்டுத் தருவதாக இருக்கவில்லை. அபயபுரம் பகுதிக்கு சென்றிருந்த நால்வரையும் சிங்களவர்கள் அடிப்பதைக் கண்டேன். நாம் அபயபுரம் நோக்கி முன்னோக்கி செல்லும் போது பொலிசார் பின்நோக்கி சென்று கொண்டிருந்தார்கள்.

அபயபுரம் பகுதியில் கடைப்பக்கமாக இருந்த ஒழுங்கையில் பொலிசார் நின்றிருந்தார்கள்.

சிங்களவர்கள் எம்மீது கல் எறிந்தார்கள். வந்த கற்களை நாம் மீண்டும் எடுத்து எறிந்தோம். அல்பா காட்சியறை வரை முன்னோக்கிச் சென்றோம். கடைபபக்கமாக நின்ற பொலிசார் தமக்குக் கல்பட்டதாக கூறினார்கள்.

பின்னர் பொலிசார் எமது பக்கமும், சிங்களவர்கள் பக்கமும் கண்ணீர் புகைக குண்டுகளை எறிந்தார்கள். புகை நேரத்தில் பாரிய குண்டுச்சத்தம் கேட்டது. நான் விழுந்துவிட்டேன். நான் நின்ற இடத்தில் இருந்து 5 அடி தூரத்தில் குண்டு வெடித்தது. எனக்கு பின் பக்கமாகவே குண்டு விழுந்தது. குண்டு எங்கிருந்து வந்தது என்பது எனக்குத் தெரியாது. எனது காலில் காயம்பட்டது.

சுமார் 2 நிமிடம் வரை எவரும் உதவிக்கு வரவில்லை. பின்னர் இளைஞர்கள் சிலர் என்னை டவுண் பக்கம் தூக்கிச் சென்றனர். பின்னர்10 நிமிடத்தில் வான் ஒன்றில் எம்மை எடுத்துக் கொண்டு வந்தார்கள் எனத் தெரிவித்தார்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### சேவைக்காலப் பயிற்சித் திட்ட செயலமர்வு

நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சிச் செயதிட்டம், பாடசாலை அபிவிருத்தி பற்றிய அதிபர்களுக்கான அறிமுகச் செயலமர்வு என்பன இன்று ஆரம்பமாகவுள்ளன.

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் 3 நாட்களுக்கு நடைபெறும் இச் செயலமர்வுகள்- காலை 9 மணி தொடக்கம் 5 மணி வரை நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் தெரிவித்துள்ளார். (61)

### சுற்றுலாப் புதிர்ப் போட்டி

செரண்டிப் விமான சேவை நிறுவனம்- சுற்றுலாப் புதிர்ப் போட்டிகளை இன்று யாழ்.நகரிலும், நெல்லியடியிலும், நாளை சாவகச்சேரியிலும் நடைபெறவுள்ளது

### கசிப்பு வழக்கில் ரூ.45 ஆயிரம் அபராதம்

(நமது நிருபர்)

யாழ்.நீதிமன்றில் நேற்று முன் தினம் நடைபெற்ற வழக்கொன்றில் 15 லீற்றர் கசிப்பு வைத்திருந்த குற்றத்துக்காக 45 ஆயிரம் ரூபா குற்றப்பணம் செலுத்த அல்லது 3 வருட கடுழிய சிறைத் தண்டனையை விதித்து யாழ்.மேலதிக நீதிபதி சரோஜினிதேவி இளங்கோவன் உத்தரவிட்டார்.

அச்செழுவைச் சேர்ந்த பெனடிக்ற ரெலாதாஸ் என்பவரே 15 லீற்றர் கசிப்பு வைத்திருந்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டவராவார்.

குற்றவாளி 45 ஆயிரம் ரூபாவை குற்றப் பணமாக செலுத்துவதற்கு ஒப்புக் கொண்டார். (லி)

### உதைபந்தாட்ட இறுதிப்போட்டி

அகில இலங்கை பாடசாலைகளுக்கான யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட இறுதிப்போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# வலி. வடக்கு விடுவிப்புப் பேரணியிலிருந்து...



தெல்லிப்பளை பிரதேச செயலகத்தை நோக்கி மக்கள் பேரணி



பேரணியின் நிறைவில் பிரதேச செயலகத்தில் திரண்டிருந்த மக்கள் வெள்ளம்



தமிழர் கூட்டமைப்பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களான அ. விநாயகமூர்த்தி, பொ. கஜேந்திரகுமார், எம்.கே. சிவாஜிலிங்கம் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவமகராஜா ஆகியோர் உரையாற்றுவதை படங்களில் காணலாம்



நேற்றைய பேரணியின் இறுதியில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட பிரமுகர்களையும், மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் பரமநாதன் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரநிதியிடம் மகஜர் கையளிப்பதையும் படங்களில் கணலாம்

# இராணுவ அதிகாரிகள் கூறுவதையே அரசாங்க உயர்மட்டம் கேட்கிறது

## வலி. வடக்கு பேரணியில் சிவாஜிலிங்கம்

(வலி. வடக்கு)

அரசாங்கத்திடம் தமிழர் கூட்டமைப்பு முன் வைக்கும் கோரிக்கைகளை அரசாங்கம் சாதகமாக பரீசிலிப்பதாக இல்லை. எம்மை ஓர் ஏமாளிகள் என கருதுகிறது. மாநாடு, பேச்சுவார்த்தை என்று கூறு கிறார்களே தவிர, உருப்படியான நடவடிக்கை எதுவும் இல்லை. இந்த நிலை நீடித்தால் அரசாங்கத்திற்கு நாம் வழங்கும் ஆதரவு விலக்கிக் கொள்ளப்பட நேரிடும். இப்படிக் கூறுகிறார் தமிழர் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிவாஜிலிங்கம்.

வலி. வடக்கு மக்களின் விடிவிற்கான பேரணி முடிவில், வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்ற கூட்டத்தில் உரை யாற்றியபோதே, அவர் இப்படிக் கூறினார்.

வலி. வடக்கு- தெற்கு பொது அமைப்புகளின் ஒன்றியத்தலைவர் சி. குமாரவேல் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசு கையில் கூறியதாவது-

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு 8 மாதங்கள் கடந்து விட்டன. ஆனால் அதில் கூறப்பட்ட விடயங்கள் இன்னமும் அமுல் செய்யப்படவில்லை. மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு தடையாக உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் மக்களின் குடியிருப்புகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. அரச உயர்பீடத்தில் இருப்பவர்கள், இராணுவ அதிகாரிகள் கூறுவதை கேட்கிறார்களே தவிர, எமது மக்களின் துன்பத்தை உணர்கிறார்களில்லை. எமது பிரச்சினைகளை தீர்ப்பதற்கு எந்த அரசாங்கத்திற்கும் விருப்பமும் இல்லை, தயாரும் இல்லை. புலிகளை வெல்ல முடியாது என்பதற்காகவே பேச்சுவார்த்தையில் ஈடுபடுகிறார்கள். ஆகவே, தமிழ்மக்கள் யாரையும் நம்பி வாழ முடியாது. நமது விடுதலைக்காக, நமது உரிமைகளுக்காக, நாமேதான் போராட வேண்டும். சமாதானம் என்ற ஒன்றுக்காகவேதான் இன்று பொறுமையைக் கடைப்பிடிக்கிறோம். இந்தப் பொறுமை எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதைக் கூறமுடியாது என்றார்.

தமிழர் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா பேசுகையில் கூறியதாவது-

இன்று வலி. வடக்கு மக்களால் நடத்தப்பட்ட பேரணி, இம் மக்களது அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகிறன என்பதை, இந்த நாட்டிலும் சர்வதேச அளவிலும் எடுத்துக்காட்ட நல்லதோர் சந்தர்ப்பமாக அமைந்து விட்டது. தாய்லாந்தில் இடம்பெறும் 2ம் கட்டப் பேச்சுவார்த்தையில் மீளக்குடியமர்வும் உயர் பாதுகாப்பு வலயங்களும் என்னும் விடயங்கள் ஆராயப் படுவதால், இரண்டு மூன்று வாரங்களுக்கு நாம் பொறுமையாக இருப்போம். அங்கும் வலி- வடக்கு மக்களின் பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படாவிடில் தொடர் போராட்டங்களை முன்னெடுப்போம்.

பயங்கரவாதிகள் என முத்திரை குத்தப்பட்டவர்களுடன் இன்று சர்வதேசத்தின் ஆதரவுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது. விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் அல்லர். விடுதலைப்புலிகள் போராளிகள் என்பதை சர்வதேசமும் இன்று அங்கீகரிக்கிறது. இவையெல்லாம் மக்கள் போராட்டத்தின் மூலம்தான் நாம் எதையும் சாதிக்க முடியும் என்றார்.

தமிழர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பேசுகையில் கூறியதாவது- மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு தடைக்கல்லாக இருப்பதன் மூலம் அரசாங்கம் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறி விட்டது என்றே சொல்ல வேண்டும். மக்களின் இயல்பு வாழ்க்கை குறித்த விடயங்கள் உடன்படிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் அரசாங்கம் இராணுவ நலன்களுக்கே முன்னுரிமை அளிக்கின்றது.இவ்வாறான நிலையில் பிரச்சினைகள் தீரப்போவதில்லை. நாம் கொடுக்கும் அழுத்தம் அதிகரிக்க வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் உங்கள் நலனுக்கே முடிந்த அளவில் பாடுபடுவோம் என்றார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் 'நமது ஈழநாடு' நிர்வாக இயக்குனருமான எஸ். சிவமகாராஜா பேசுகையில் கூறியதாவது-

புரிந்துணர்வு உடன்படிக்கையால் வலி.வடக்கு மக்களுக்கு எந்த வித பயனும் கிடைக்கவில்லை. முகாம்களில் வாழும் அவல வாழ்வு எத்தனை நாட்களுக்கு என அவர்கள் ஏங்குகிறார்கள்?. எமது மக்களுக்குரிய வாழ்விட உரிமையைத் தாருங்கள் என்றுதானே நாம் கேட்கிறோம். அதை மறுப்பது சரியா? தொடர்ந்தும் சாதகமான நிலை ஏற்படாவிட்டால் போராட்டங்களில் ஈடுபடுவது தவிர்க்க முடியாததாகிவிடும் என்றார்.

யாழ்.அரச அதிபர் செ. பத்மநாதன் பேசுகையில் - வலி.வடக்கு மக்களின் கோரிக்கைகளை பிரதமருக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலளருக்கும் தெரியப்படுத்துவதுடன், இது தொடர்பாக எனது ஒத்துழைப்பையும் முழுமையாகத் தருவேன் என்றார்.

மற்றும் தமிழர் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் , அ. விநாயகமூர்த்தி, வலி. வடக்கு அகதிகள் புனர்வாழ்வு கழகத்தலைவர் க.பரமநாதன், ஆ. சி. நடராசா உட்படப் பலர் உரையாற்றினர். (க,லி)

# எங்கே போகிறோம்...?

## ஆசிரியர்கள்... மாணவர்கள்... சமூகம்...



ஒரு சமூகத்தில் இயங்கும் அமைப்புகளில் சில அடிப்படையான, சமூகத்தின் கட்டுமானங்களைப் பேணுவதற்கும் கட்டியெழுப்புவதற்கும் துணை நிற்கின்றன. அவற்றினூடாகச் சில பண்புசார் மனித இயல்புகள் ஊட்டி வளர்க்கப்படுகின்றன. அத்தகையவற்றின் சமூகப் பயன்பாடுகள் எப்போதும் அழுத்தமாகவே எடுத்துக் கூறப்பட்டும் வருகின்றன. பாடசாலைகள் அத்தகைய அமைப்புகளில் ஒருவகையின. பாடசாலைகள் வெறும் கல்விக்கூடங்களாக, பாடம் சொல்லித்தரும் இடங்களாக மட்டும் கருதப்படுவதில்லை. அவை ஒரு மாணவனின் ஆளுமை உருவாக்கத்தில் அவை வழங்கும் பாகம் மிகக் கணிசமானது.

துரதிஷ்டவசமாக எமது நாட்டில் இன்று நடைபெறுகின்ற பல சம்பவங்கள் மிகவும் கவலை தருவனவாக அமைந்து விட்டன. சமீபகால நிகழ்வுகளை மட்டும் வைத்துக்கொண்டு இதைப் பேசவரவில்லை. பொதுவாக எமது சமூகத்தில் ஆசிரியர் – மாணவர் உறவுகளில் வருந்தத்தக்க விதமான பாதிப்புக்கள் நேர்ந்து வருவதை நாம் அனைவருமே அவதானித்திருக்கிறோம்.

ஏன் இந்த நிலை..? ஒரு சாரார் இப்போதும் மாதா ,பிதா, குரு, தெய்வம் என்றோ 'குருசாட்சாத் பரப்பிரம்மம்' என்றோ பேசிக்கொண்டு காலந்தள்ளுகிறார்கள். அத்தகைய நோக்குகள், அணுகுமுறைகள் பெரிதும் வழக்கொழிந்த நடவடிக்கைகளாகிப் பல ஆண்டுகளாகி விட்டன. அவற்றை எதிர்பார்த்து இப்போதெல்லாம் எங்கே பிள்ளைகள் ஆசிரியர்களை மதிக்கிறார்கள்..? என்று ஆதங்கப்பட்டுக்கொள்வதில் பயனேதுமில்லை. எதையும் நாங்கள் நடைமுறையோடு தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டும். ஆரம்பகாலத்தில் ஆசிரியர் என்பவர் தெய்வ நிலையிலும் மாணவர்கள் தாசர்களாகவும், இருதரப்பாருமே ஏற்றுக்கொண்ட ஒரு வாழ்க்கை முறை இருந்தது. அது மிகமிகப் பழைய காலம்.

பின்பு வந்த காலத்தில் ஆசிரியர் சொற்படி அடங்கி நடப்பது மாணவரின் தவிர்க்க ஒண்ணாத கடமையாகச் சொல்லப்பட்டது. அதுவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மாணவனை ஆசிரியர் எப்படியாவது படிக்க வைத்துவிட வேண்டும் என்பதே அந்த பிரதான நோக்காகக் கொள்ளப்பட்டது.

'கண்ணைமட்டும் விட்டு மிச்சத்தை உரிச்சாவது படிக்க வையுங்கோ – நான் ஏன் என்றும் கேட்கமாட்டேன்' என்று பெற்றோர் மாணவனைக் கற்பிக்கும் ஆசிரியரிடம் சொல்லிப்போனார்கள்.

இன்று நடைமுறை வேறாகிவிட்டது. மாணவன் என்பவன் இன்னொரு தனிமனிதன். கற்பிக்கும் காரணத்தால் மாணவனை ஆசிரியர் எதுவும் சொல்லலாம். எப்படியும் தண்டிக்கலாம் என்று கருதுவது இன்று பொருந்தாது. (கற்பித்தலில் சரீர தண்டனை என்பது தனியாகப் பார்க்கப்பட வேண்டிய ஒன்று) இந்த இடத்தில் தான் மனித உளவியல் நமது கவனத்துக்கு உட்படவேண்டியிருக்கிறது.

சாதாரணமாக எந்த ஒரு மனிதனிடத்திலும் 'நான்' என்னும் உணர்வு பிரதானமாகச் செயற்படுகிறது. அதனைக் கௌரவிக்கும் கடமை பரஸ்பரம் ஆசிரியர், மாணவர் ஆகிய இருதரப்பினருக்கும் உண்டு. ஒருவரின் 'நான்' காயப்படுத்தப்படும்போது தான் 'இருவருக்கும்' இடையில் மோதல் ஆரம்பமாகிறது என்பது உளவியல். அந்த ஒருவர் யாராகவும் இருக்கலாம். இந்த நோக்கில் பார்க்கும்போது ஆசிரியர் மாணவர் என்னும் இரு தரப்பாரும் மிக அவதானமாக ஒருவரை ஒருவர் கையாளும் கடமை முக்கியமானதாகிறது.

கற்பித்தற் கடமைக்காகப் பாடசாலைக்கு வரும் ஆசிரியர் வெறுமனே தான் கற்றதை மாணவனிடம் செலுத்திவிட்டுச் செல்லும் காரியத்துக்காக வருபவர் அல்ல. ஒரு ஆசிரியரின் பணி மிகப் பெரியது – காத்திரமானது – மிகமிகப் பொறுப்பானது. மாணவனைக் கையாளுவது என்னும் நிலையில் ஒரு ஆசிரியர் மிக விழிப்புடனும் பொறுமையுடனும் சுயகட்டுப்பாட்டுடனும் தொழிற்பட வேண்டியவராக இருக்கிறார்.

இன்னொருவருடைய பிள்ளை – இன்னொரு தனிமனிதன் என்னிடம் மாணவனாக இருக்கிறான் என்ற உள்ளுணர்வு எப்போதும் இருக்க வேண்டும். அவனுக்குரிய தனிமனித மதிப்பில் காயம் ஏற்படாவிதமாக மிகப் பொறுப்புடன் அவனுக்குரிய நல்லதைச் சொல்லும் கடமை ஆசிரியருக்கு உண்டு. இந்த இடத்தில் ஆசிரியரின் உணர்வைக் காட்டிலும் அறிவு ஆழமாகத் தொழிற்பட வேண்டும். மாணவன் – அதுவும் – தற்கால மாணவன், ஒரு சிக்கலான சமூக அமைப்பிலிருந்து வருகின்ற மாணவன். சூழலில் ஏற்படத்தக்க தாக்கங்களுக்கு இலகுவில் இரையாகிவிடக்கூடிய பிள்ளை இவன் என்ற எண்ணம் ஒரு ஆசிரியரிடம் இருக்க வேண்டும். ஒழுங்கு பேணல் நடவடிக்கையில் இருக்கும் ஆசிரியருக்கு இந்தப் பண்பு மிக அவசியமாகிறது.

'இழுத்துப்போட்டு நாலு சாத்துச் சாத்தி' விடுவது எப்போதும் எங்கேயும் எல்லாப் பிரச்சனைகளிலும் சாத்தியமுமில்லை ,சரியுமில்லை.

ஏதோ ஒரு குற்றச் செயலுக்காக என் முன்னால் குற்றவாளியாக நிற்கும் இவன் ஒரு பிள்ளை என்ற எண்ணம் – பெற்றோரால் நல்வழிப்படுத்தவும் கல்வியூட்டவும் என என்னிடம் அனுப்பப்பட்ட ஒரு பிள்ளை, என்ற உணர்வுடனேயே ஒரு ஆசிரியர் தொழிற்பட வேண்டியவராய் இருக்கிறார்.

பிள்ளை எப்படியும் நடக்க நான் பொறுமையாக இருக்கவோ என்று கேட்டுவிடுவது புத்திசாலித்தனமல்ல. பிள்ளை எப்படியும் நடக்கும் விதமாகவோ – பேசும் விதமாகவோ சூழல் உருவாகாமல் மிக அவதானமாகத் தொழிற்படுவது எமது கடமையாக இருக்கிறது. ஆம் – மிகவும் சிரமமான பணிதான் இது. இதற்கு ஆசிரியர் தனது தரத்தைப் பேணுபவராகவும் மாணவர் மத்தியில் மதிப்பிறக்கம் ஏற்பட்டு விடாதவராகவும் இருக்க வேண்டும். 'ஆச்சர்ய தேவோபல' என்பதை நடைமுறைப்படுத்த விரும்புபவர்கள் தங்களைத் தேவ நிலையில் வைத்திருப்பது அவசியமல்லவா,

வேதனைக்குரிய விசுஷயம் எதுவென்றால், எமது மாணவர்களின் கொந்தளிக்கும் இயல்பும் கோபக்குணமும்– சராசரி சில்லறை லாபம் தேடுபவர்களின் கருவிகளாக்கப்பட்டு, மாணவர்கள் பகடைக்காய்களாக ஆக்கப்படுவது தான். நாம் எங்கே போகின்றோம்...

நேசன்

(மீண்டும் சந்திப்போம்)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

COMPUTERS ELECTRONIC SYSTEMS (PVT) LTD

- கணினியில் முன்னனுபவம் இல்லாதவர்களிற்கு தனிப்பட்ட முறையில் விசேட கவனம் செலுத்தப்படும்.
- சிறுவர்களிற்கான அறிமுக வகுப்புக்கள், games, மற்றும் விசேட வகுப்புக்கள்.

கணினி உலகில் முன்னணியில் திகழ இன்றே நாடுங்கள்!!

CES

Computer Electronic Systems (Pvt) Ltd.
No.223,Kasthuriyar Road,
Jaffna.
(Near J/Hindu Primary School)

விண்ணப்ப முடிவுத் திகதி:
15.12.2002

# முஸ்லிம்களை புறந்தள்ளி தீர்வு காணமுடியாது!

## கலாநிதி.அன்ரன் பாலசிங்கம் கருத்து

(லண்டன்)

'முஸ்லிம்களைப் புறந்தள்ளி விட்டு இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண முடியாது. இவ்வாறு அவர்களைப் புறக்கணித்து தீர்வு காணும் நோக்கமெதுவும் எமக்கோ அரச தரப்புக்கோ இல்லை.' இவ்வாறு விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியரும் அரசியல் ஆலோசகருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

தாய்லாந்துக்கான விமானப் பயணத்தை விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளும் அரசாங்கத்தரப்பு பிரதிநிதிகளும் மேற்கொண்டிருந்த வேளையில்- அன்ரன் பாலசிங்கம் பயணம் செய்த விமானத்துள் பி.பி.ஸியின் செய்தியாளரும் உடனிருந்து அவரை நேர்கண்டார்.

அந் நேர்காணலில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் மேலும் தெரிவிக்கையில் -முஸ்லிம்கள் மத்தியில் அண்மைக் காலமாக பேச்சுவார்த்தைகள் தொடர்பாக ஏற்பட்டிருக்கும் குழப்ப நிலை விடுதலைப் புலிகளுக்கு கவலையை அளிக்கிறது. முஸ்லிம் மக்களின் அபிலாசைகளின் அடிப்படையில் அவர்களது கலாசாரம், பொருளாதாரம் உட்பட சகல விடயங்களும் பேச்சு வார்த்தையில் கவனத்துக்கு எடுக்கப்பட்டே பிரச்சினைகான தீர்வு காணப்படும்.

விடுதலைப்புலிகள், அரசாங்கம் முஸ்லிம்களின் பிரதிநிதிகள், என முத்தரப்பும் மேசையில் அமர்ந்து பேசியே தீர்வு காணப்படும் என்று கூறினார்.

முத்தரப்பும் பேசி ஒரு இணக்கமான முடிவுக்கு வரமுடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

முஸ்லிங்களுக்கு எவ்வித ஆபத்துமில்லை.அவர்களைப் புறந்தள்ளி எவ்விதத் தீர்வும் வரப்போவதில்லை என்று வலியுறுத்திய பாலசிங்கம், முஸ்லிம்களை பொறுமைகாக்குமாறும் வேண்டிக்கொண்டார்.

பேச்சு வார்த்தைகளின் ஆரம்பக் கட்டத்தில் நிற்கிறோம். ஆரம்பக்கட்டத்திலேயே அவசரப்பட்டு நிபந்தனைகள் போட்டு பேச்சுக்களுக்கு பாதக நிலைமைகளைத் தோற்றுவிக்க முஸ்லிம் பிரதிநிதிகள் முனையமாட்டார்கள் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

## உயர் தொழில் நுட்ப மாணவர் யாழ்.நகரில் நேற்றுப் பேரணி

யாழ் உயர் தொழில் நுட்ப நிறுவனத்திற்கு நிரந்தரமாக காணியோ அல்லது கட்டிடமோ இதுவரை வழங்கப்படாததைக் கண்டித்து மாபெரும் கண்டனப் பேரணியொன்று நேற்று நடைபெற்றது.

மேற்படி கல்வி நிறுவனத்தின் நூற்றுக்கணக்கான மாணவர்கள் ஒன்று திரண்டு இக்கண்டனப் பேரணியை நடாத்தினர். உயர் தொழில் நுட்ப நிறுவன மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இக்கண்டனப் பேரணி நேற்றுக் காலை 9.30 மணியளவில் இக்கல்வி நிறுவன முன்றலிலிருந்து ஆரம்பமாகியது. இக்கண்டனப் பேரணி பலாலி வீதியூடாக நகர்ந்து, யாழ். நகரையடைந்தது. பின் அங்கிருந்து பிரதான வீதியூடாக யாழ். செயலகத்தை நண்பகல் அளவில் அடைந்து, யாழ். செயலகத்தில் அரசாங்க அதிபருக்கான மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

## மீசாலையில் இன்று மறியற் போர்

மீசாலையில் வடக்கு, மந்துவில் தெற்கு ஆகிய பகுதிகளுக்கு மக்களை குடியமர அனுமதிக்குமாறு கோரி இன்று மறியல் போராட்டம் நடைபெறவுள்து.

இன்று காலை 7.30 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலகம் இந்த மறியல் போர் நடைபெறவுள்ளது.

## அமைச்சர் மிலிந்த ....

யங்களை தயார் செய்வதே, இன்று தாய்லாந்தில் ஆரம்பமாகவுள்ள முதலாம் சுற்றின் இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைகளின் நோக்கம் என அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தற்போது சர்வதேச ரீதியில் சமாதான நடவடிக்கைகளுக்கு கிடைத்த ஒத்துழைப்பை பயன்படுத்தி- நிதி உதவிகளை பெற்றுக் கொள்வதற்கான கூட்டுச் செயலணி, இந்தப் பேச்சுவார்த்தைகள் மூலம் ஏற்படுத்தப்படவுள்ளது.

அதன்பொருட்டு கூட்டுச் செயலணி செயற்பாடுகள் பற்றி முடிவு எடுக்கப்படும் என்றும் அமைச்சர் ஜி.எல். பீரீஸ் மேலும் கூறினார்.

இதேவேளை-விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மும், நோர்வே தூதரக அதிகாரி தோமஸ் ரங்லன், லிசாகோல்ட் ஆகியோரும் தாய்லாந்து சென்றுள்ளனர்.

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் இன்று காலை தாய்லாந்தை வந்தடைவார் என்றும் தெரிவிக்கப்பட்டது

இது இவ்வாறிருக்க- விடுதலைப் புலிகளுடன் விசேட ஊடகப் பிரிவுக் குழுவொன்றும் நேற்று தாய்லாந்து சென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## மீள் குடியமர்வை ....

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், 'நமது ஈழநாடு' பத்திரிகை நிறுவனத்தின் நிர்வாக இயக்குநருமான எஸ்.சிவமகராஜா, கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தலைவர் சி.வி.கே. சிவஞானம், மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் பரமநாதன் ஆகியோர் முன்னே செல்ல, மேற்படி போராட்டத்தை பறைசாற்றும் வகையிலான செந்நிறப் பதாகை வீதியின் குறுக்காக எடுத்துச் செல்லப்பட்டது. அதனைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் நூற்றுக்கணக்கான பொதுமக்களும் அணிவகுத்துச் சென்றனர். இப் பேரணியில் சென்றவர்கள் தமது கோரிக்கைகளை வலியுறுத்தும் வகையிலான சுலோகங்கள் அடங்கிய பதாகைகளையும், சுலோக அட்டைகளையும் தாங்கியவாறு சென்றனர்.

முற்பகல் 11.15 மணியளவில் தெல்லிப்பளை பிரதேச செயலகத்தை இப் பேரணி சென்றடைந்தது. இப்பேரணியையெட்டி மேற்படி பிரதேச செயலகத்தில் அதிகளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதற்காக வழமைக்கு மாறாக அதிகளவு பொலிசார் அப் பகுதியில் கடமையில் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர்.

இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளும் அங்கு சமுகமளித்திருந்தனர். அத்துடன், யாழ். அரசாங்க அதிபர் செ. பத்மநாதனும் அங்கு வருகை தந்திருந்தார்.

மக்கள் பேரணி இப் பிரதேச செயலகத்தை சென்றடைந்ததும் பிரதேச செயலக திறந்த வெளியரங்கில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது.

வலி. வடக்கு, வலி. தெற்கு பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் குமாரவேல் தலைமையில் நடைபெற்ற இப்பொதுக் கூட்டத்தில் வைத்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கான மகஜர் ஒன்று யாழ். அரசாங்க அதிபருடாக கையளிக்கப் பட்டது. இம் மகஜரின் பிரதியொன்று இலங்கைப் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதியிடமும் கையளிக்கப்பட்டது.

இப் பொதுக் கூட்டத்தில் தொடக்கவுரையாற்றிய ஆர்.சி. நடராஜா, வலி. வடக்கு மக்களின் அவல வாழ்வு குறித்து நீண்டவுரையாற்றினார். தொடர்ந்து மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் பரமநாதன் உரை நிகழ்த்தினார். இவரைத் தொடர்ந்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், 'நமது ஈழநாடு' பத்திரிகை நிறுவனத்தின் நிர்வாக இயக்குநருமான எஸ். சிவமகராஜாவும் தொடர்ந்து சி.வி.கே. சிவஞானமும், கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, கஜேந்திரகுமார், சிவா ஜிலிங்கம், ரவிராஜ், விநாயகமூர்த்தி ஆகியோரும் உரை நிகழ்த்தினர்கள். இவர்களைத் தொடர்ந்து புதிய இடதுசாரிக்கட்சியைச் சேர்ந்த செந்தில்வேல் உரைநிகழ்த்தினார்.

தெல்லிப்பளை பிரதேச செயலாளர் திருமதி பத்தினியம்மா திலகநாயம் போலும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டார்

(க,லி,105,71)

## நாணய மாற்று விகிதம்

இலங்கை மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தினால் நேற்று வெளியிடப்பட்டுள்ள அந்நியச் செலாவணிகளுக்கான நாணய மாற்று விகிதங்கள் தொடர்பான விபரம் வருமாறு-

| | கொள்வனவு விலை (ரூ.ச) | விற்பனை விலை (ரூ.ச) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.20 | 96.50 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 149.15 | 150.40 |
| 1 யூரோ | 94.10 | 95.13 |
| 1 சுவிஸ் பிராங் | 64.10 | 65.14 |
| 1 அவுஸ்ரேலிய டொலர் | 53.30 | 54.17 |
| 1 ஜப்பானிய யென் | 00.27 | 00.28 |
| 1 சவூதி றியால் | 25.69 | 25.69 |

DMN யார்,அந்தமாணவ லட்சாதிபதி?
DIGITAL MEDIA NETWORK
ஆம், யாழ்ப்பாணத்தில் முதற்தடவையாக

டிஜிற்றல் மீடியா நெற்வேக்
சுவிஸ் சிகரம்

ஆகிய நிறுவனங்களின் ஆதரவுடன் ஐரோப்பாவிலிருந்து இயங்கும் தமிழ் தொலைக்காட்சி நிறுவனத்துக்காக நடாத்தப்படும் "அறிவுச் செல்வம்" மாணவர்களுக்கான போட்டி நிகழ்ச்சி

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மாபெரும் நிகழ்ச்சி

அறிவுச் செல்வம் 2002

போட்டி நிகழ்ச்சிகள்...அது மட்டுமா!!!
இசை நிகழ்ச்சிகள், அத்துடன் பாடகர், பாடகிகளுக்கான போட்டிகள்
சிறப்புரைகளும் இடம் பெறவுள்ளன.

அரிய வாய்ப்பு-
பாட்டுப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெறுபவர் சுவிற்சலாந்தில் நடைபெற இருக்கும் மிலேனிய விருது விழாவில் கலந்து கொள்ளலாம்.

நீங்கள் செய்ய வேண்டியது-
❄ பங்குபற்ற விரும்பும் அனைவரும் 02-11-2002 க்கு முன் உங்கள் விபரங்களை 0777-731815 எனும் தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யவும்.
❄ பார்வையாளர்கள், போட்டியாளர்கள் அனைவரது முகங்களும் வெளிநாடுகளில் உள்ள உங்களது உறவினர் பார்க்கும் வகையில் படப்பிடிப்புக்கள் மேற்கொள்ளப்படுவதுடன் ஒளிபரப்பும் செய்யப்படும்.
❄ பார்வையாளர்களுக்கும் பரிசுகள் காத்திருக்கின்றன.
❄ போட்டிகள் 06.11.2002 தொடக்கம் 13.11.2002 வரை காலை 9.00-மாலை6.00 மணி வரை .
❄ பார்வையாளருக்கான பிரவேசக்கட்டணம்- ரூபா 30 மட்டுமே.

தமிழ் மக்களால்,தமிழ் மக்களுக்காகவே நடாத்தப்படும்
நிகழ்ச்சிகளுக்கு அனைவரினதும் ஆதரவினை வேண்டுகிறோம்.

(சி 112)

SERENDIB
மாபெரும் சுற்றுலாப் புதிர்
sakthe சக்தி FM

செரண்டிப் (SERENDIB) விமானசேவை நிறுவனம், சக்தி F.M உடன்
இணைந்து வழங்கும் 'செரண்டிப் சுற்றுலாப்புதிர்'
இப்போட்டியில் பங்குபற்றும் போட்டியாளர்களுக்கு செரண்டிப் வழங்கும்
500 ரூபா பெறுமதியான டிஸ்கவுண்ட் வவுச்சர் (discount voucher)
அத்துடன் சக்தி F.M வழங்கும் நினைவுப் பரிசுகளும் காத்திருக்கின்றன

எங்கே எப்போது என அறிய

31ஆம் திகதி- வியாழக்கிழமை (இன்று)
காலை - 10 மணிக்கு
இல- 13,
யாழ்.மின்சார நிலைய வீதி,
செரண்டிப் மனோஜ் நிறுவனம்.
மாலை - 3 மணிக்கு - நெல்லியடி

1ம் திகதி - வெள்ளிக்கிழமை
காலை -10 மணிக்கு -
சாவகச்சேரி.
மதியம் -
யாழ்.செரண்டிப் மனோஜ் நிறுவனம்.
மாலை - 3 மணிக்கு -
நல்லூர் கந்தன் ஆலயமுன்றல்.

யாவரும் பங்குபற்றி பரிசில்களை வெல்லுங்கள். . .

SERENDIB - MANO,
13, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
0777-801038, 021-2222007,
0777-512648

(சி-113)

இப்பத்திரிகை- இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 31.10.2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.